விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 12 ஜூல்கம் 30 இதழ் 195
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-8-84

துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் பலி!

[புலோலி நிருபர் [ஏ. என். எஸ். திருச்செல்வம்]

புலோலியில் ஒரே நேரத்தில் இருஇடங்களில் வைத்து இனந் தெரியாத இளைஞர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இருவர் பலியாகினர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆசைப்பிள்ளை திருநாவுக்கரசு(55 வயது) 5 பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் திருநாவுக்கரசு (45 வயது) ஆகியோரே மரண மானவர்களாவர்.

நேற்றுக்காலை 6-30 மணியளவில் புலோலி முதலியார் வாசிகசாலைக்கு அருகாமையில் வைத்து ஆ. திருநாவுக்கரசு துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானர். ஒரு சில நிமிடங்களில் கிராமக்கோடு சந்திக்கு அருகாமையில் மா. திருநாவுக்கரசு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர் இருவரும் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரண மானார்கள்.

பருத்தித்துறை நீதவான் (8ம் பக்கம் பார்க்க)

ஏழைகளின் சொத்து

(யாழ்ப்பாணம்)

"அரியாலை தெ.ப.உ விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தில் இம் மாதம் 20ம் திகதி இரவு இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்ட 10,183ரூபா ஏழைத் தொழிலாளர்களின் பணமாகும். இந்தப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது, மிகவும் வேதனைக்குரிய [8-ம் பக்கம் பார்க்க]

ஜனதிபதியின் யோசனைகள்பற்றிய மகாநாடு

தமிழர் கூட்டணி

கலந்துகொள்ளும்

(சென்னை)

"இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்களினால் அங்கிருந்து வெளியேறி இந்தியாவில் புகலிடம்பெற்றிருக்கும் இலங்கைத் தமிழர்கள், இந்திய அரசாங்கத்துக்கோ அல்லது இந்திய மக்களுக்கோ தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தும் வகையில் நடக்கக்கூடாது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார், "கொழும்பில் நாளை நடைபெறும் ஜனதிபதியின் யோசனைகள் பற்றிய மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்வதா, இல்லையா என்பது பற்றி கொழும்பில் இன்று கூடும் 'பொலிட் பீரோ'வில் முடிவுசெய்யப்படும். இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றினை காண்பதற்கு அயராத முயற்சி எடுத்துவரும் இந்தியாவின் முயற்சிகளை தமிழர் விடுதலைக் கூட்டணி தகுந்தவகையில் பயன்படுத்திக்கொள்ளும் இப் பிரச்னையில் சமரசத்தீர்வொன்றினை ஏற்படுத்தாது இலங்கை காரணமாக இருக்கக்கூடாது" ஜனதிபதி திரு. ஜே. ஆர், என்றும் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

ஜெயவர்த்தனே தட்டிக்கழிக்கும் செயற்பாட்டுக்கு நாம் (8-ம் பக்கம் பார்க்க)

மானிப்பாயில் நேற்று நடந்த கொள்ளை!

(மானிப்பாய்)

மானிப்பாய்ப் பலநாக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்றுப்பகல் துப்பாக்கிமுனையில் இனம் தெரியாத நபர்கள் கொள்ளை நடத்தியுள்ளனர்.

மேட்டார் சைக்கிளில் திடீரென வுழைந்த மூன்று இளைஞர்கள் மூன்று குண்டுகளை எறிந்து வெடிக்கச் செய்ததாகவும், பின்னர்ஏற்பட்ட பரபரப் புக்குள் இந்தக்கொள்ளையை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரொக்கப்பணமும் காசோலைகளும் வைக்கப்படும் இரும்புப் பெட்டியை தூக்கிச் சென்று லொறியொன்றுக்குள் ஏற்றிக்கொண்டு வேகமாக மறைந்ததாகவும் அறியப்படுகிறது. இந்தக்கொள்ளையில் சுமார் 75 ஆயிரம் ரொக்கப் பணம் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

கொள்ளையர்கள் கொள்ளையடிப்பதற்கு முன்பாக அங்கிருந்த தொலைபேசித் தொடர்பைதுண்டித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தனியார் பஸ்கள்மீது கல்வீச்சு! சாரதி காயம்!!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினமிரவு மீழும் தனியார் பஸ்களில் மூன்று பஸ்கள் ஈரற்பெரியகுளத்தில் கல்வீச்சுக்குள்ளாகின.

முதல் சென்ற பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி உடைந்ததுடன், சாரதிக்கும் காயமேற்பட்டுள்ளது.

பஸ்ஸில் சென்ற பிரயாணிகளுக்கு காயமெதுவும் ஏற்படவில்லை. கல்வீச்சு நடைபெற்றபோது பஸ்கள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து சென்றுகொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

மூன்று பஸ்களும் நேற்றுக்காலை கொழும்பை அடைந்துவிட்டன. [க]

கிரிக்கெட் டெஸ்ட்

இங்கிலாந்து: 370

(லண்டன்)

இங்கிலாந்து-இலங்கை அணிகளுக்கிடையே லண்டன் 'லாட்ஜ்' மைதானத்தில் நடைபெறும் கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 370 ஓட்டங்களை எடுத்திருந்தது. காப்டன் டேவிட் கவர் 55 ஓட்டங்களை எடுத்தார். (8ம் பக்கம் பார்க்க)

துப்பாக்கி இளைஞர்களின் மற்றுமொரு முயற்சி

(கொழும்புத்துறை)

யாழ் பழைய கச்சேரியிலுள்ள இரு திணைக்களங்களுக்குள் நேற்று முன்தினமிரவு துப்பாக்கி இளைஞர்கள் சிலர் புகுந்ததாகப் பொலிவில் புகார் செய்யப்பட்டுள்ளது,

யாழ். நில அளவைத் திணைக்களம், யாழ். கமநல சேவைத் திணைக்களம் ஆகிய இரு திணைக்களங்களிலுமே இக் கொள்ளை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினமிரவு பத்து மணிக்கு யாழ் பழைய கச்சேரிக் கட்டிடத்தினுள் நுழைந்த ஆறு இளைஞர்கள் அங்கிருந்த 3 காவலாளிகளுக்கும் துப்பாக்கிகளைக் காட்டிக் கட்டிடத்தின் பின்பக்கம் கொண்டு சென்று கட்டிவைத்து விட்டு இருதிணைக்களங்களின் பூட்டுக்களையும் உடைத்து உள்ளே புகுந்து தேடுதல் செய்த பின்னர் சென்றுவிட்டனரென்றும், ஆனால் இரு திணைக்களங்களிலும் எதுவித பொருட்களும் கொள்ளையடிக்கப் பட்டிருக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

இரும்புப் பெட்டிகள், அலுமாரிகள் மேசைலாச்சிகள் யாவும் திறக்கப்பட்டுக் கிளறப்பட்டிருந்தன.

தபாலகத்தில் ஒய்வூதியம்

(கரவெட்டி)

கரவெட்டி தபாலகத்தில் ஒய்வூதியம்பெறும். பெண்மணிகளுக்கு யாழ்ப்பாணம் செல்லாமல் இத்தபாலகத்திலேயே ஒய்வூதியம் பெறத்தக்க வகையிலான ஏற்பாடுகளை இத்தபாலக அதிபர் திரு. பரமேஸ்வரன் செய்துள்ளார்.

இதன்படி இத்தபாலகத்தில் தினந்தோறும் சேரும் பணத்தை எடுத்து தினசரி ஒருகுறிப்பிட்ட தொகையினருக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடமராட்சி ஒய்வூதியம் பெறுவோர் சங்கம், அவ்வப்பகுதி கிராமியவங்கிகளில் ஒய்வூதியம் பெற விரும்புவோரை அதற்கான ஏற்பாடுகள் பற்றி விளக்கும் பொருட்டு எதிர்வரும் முதலாம் திகதிலை கரவெட்டி தபாலகத்துக்கு அருகாமையில் சமுகந்தருமாறு. சங்கத் தலைவர் திரு ஆ. கணபதிப் பிள்ளை கேட்டுள்ளார்.

சமாதான சபை

(மாவிட்டபுரம்)

வசாவிளானில் உருவாக்கப்பட்டுள்ள சமாதான சபை 30 க்கும் மேற்பட்ட பிரச்சினைகளை சமாதன முறையில் தீர்த்துவைத்துள்ளது.

அளவெட்டி சமாதான (8 ம் பக்கம் பார்க்க)

சென்னை ஒத்துழைக்க மறுக்கிறதாம்!

ரூபவாஹினி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரூபவாஹினியில் தமிழ்த் திரைப்படம் காண்பிப்பதற்கு சென்னை ஒத்துழைக்க மறுக்கிறது என்று ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தலைவர் டாக்டர் அனுரா குணசேகரா கவலைதெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுநடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் தனது கவலையை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு ஜூலைக்கலவரத்தின் பின்னர் போதிய தமிழ் ஊழியர்கள், கலைஞர்கள் இல்லாததால் மிகவும் கஷ்ரப்பட வேண்டியேற்பட்டுவிட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் சுமார் 15 நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் எடுக்க பட்ட கணக்கெடுப்பின்படி 2 லட்சத்து அறுபது தொலைக்காட்சிப் பெட்டிகள் இருப்பது தெரியவந்தது ஆனால் 3 லட்சம் தொலைக்காட்சி பெட்டிகள் இருப்பதாக தெரிகிறது என்றும் அவர் கூறினர்.

எட்மன்ட் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புரட்சிவாத சமசமாஜகட்சித் தலைவர் திரு எட்மன்ட் சமரக்கொடி, வடபகுதியில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்நகர் வந்த அவர். அன்று நடந்த மாதர்அணி ஊர்வலத்தையும் பார்வையிட்டார். அவருடன், அவரின் கட்சியைச் சேர்ந்த திரு. சில்வா என்பவரும் வந்திருந்தார்.

திரு. சமரக்கொடி, வல்வெட்டித்துறை கரவெட்டி அச்சுவேலி பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களையும் யாழ்ப்பாணத்தில், எரிக்கப்பட்ட கடைகள் வீடுகளையும் பார்வையிட்டபின் நேற்று முன்தினம், கொழும்பு திரும்பினர்கள் (க)

வாலைலி நிலையத்துக்கு முன்பாக பெண்கள் ஆர்ப்பாட்டம்

(பெங்களூர்)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, பெங்களூரில் உள்ள அகில இந்தியவானொலி நிலையத்துக்கு முன்பாக பெண்கள் உட்பட 100 தி.மு.க தொண்டர்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

விளம்பரம்

விற்பனைக்கு

சங்கானை கோயில் தெருவில் பதினைந்து பரப்பு பரப்பளவு, தொடர்பு கொள்க: து. கனக சபை, கனகசபை ரோட் மானிப் பாய். 1459

வீட்டுப் பாவனைக்குரிய மின் சார உபகரணங்களுக்கும் இதர பாவிப்புக்குரிய ஏனையபொருட் களும், உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 18/5, மாட் டின் ரோட், யாழ்ப்பாணம். 1460

அல்சேசன் (Pure) 4 மாதக் குட்டிகள் (கறுப்பு, மண்நிறம் கலப்பு) உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 21, கண்டி வீதி, நாவற்குளி. 1461

வண்ணார்பண்ணை, சீனியர் ஒழுங்கையில், கலட்டி அம்மன் கோவிலுக்கு அருகாமையில், வீடு கட்டக்கூடிய தனிக் காணி 3பரப்பு 3குளி உடன்விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி P. மயில்வாகனம், பலாலி வீதிச் சந்தி, உரும்பராய். 1462

பழைய பூங்கா வீதியில் 4 பரப்புடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு. விப ரங்களுக்கு 615 ஆஸ்பத்திரி வீதியில் (காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்கு முன்பாக) அமைந்துள்ள லக்கி சேர்ஸ் சென்ரரில் தொடர்பு கொள் ளவும். தொலைபேசி இலக்கம் 24361. [1447]

இருநூறிற்கும் மேற்பட்ட வீடியோ கசட்டுகள் தரமான தமிழ் ஆங்கில சினிமாப்படங் கள் பிரதிசெய்யப்பட்டு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. அத்துடன் "வீடியோடெக் கும்" [Model No: National 7500] விற்பனைக்கு உண் டு வாங்க விரும்புவோர் தொட ர்பு கொள்ளவேண்டிய முக வரி. அ ரட்ணசிங்கம் 51, சிவன்புண்ணை வீதி யா ழ் ப் பாணம். 1439

தேவை

பாதுகாப்பு உத்தியோகத் தர், யாழ்ப்பாணத்தில் தனி யார் வங்கிக்கு, ஓய்வுபெற்ற பொலிஸ், இராணுவ, கடற் படை உத்தியோகத்தர் விண் ணப்பிக்கலாம். உடன் நேரில் தொடர்புகொள்ளவும். முகவரி த. குணரட்னம், சீ-நோர் பங்களா, வட்டு. மேற்கு, வட் டுக்கோட்டை. 1457

வாடகைக்கு

யாழ். நகரில் சகலவசதிகளு டன் கூடிய (தொலைபேசி உட் பட) வீடு வாடகைக்கு உண்டு. (வர்த்தகத்திற்கும் பயன்படுத் தலாம்) வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளவும். Comteck Computer Institute, No: 14, St. Peters Lane, (ஆஸ் பத்திரி வீதி, 3-ம் குறுக்குத் தெருச் சந்தி) Jaffna. 1458

வகுப்புகள்

I. C. M. A, P II Classes Commencing 1. 9. 84 Lecturers: F, Balakrishnan; R. N. Varendran; K. Nanda-kumar; A. Umashankar II-ம் வகுப்பு மாணவர்களுக்கு விசேட கொம்புயூட்டர் செய்கைமுறை வகுப்புக்கள் பள்ளிக்கூடங்களில் பாவிக்கப் படும் Sinclair Z X Spectrum கொம்புயூட்டர் மூலம் 10 - 9 - 84 ல் ஆரம்பிக்கப் படும். ராதாகிருஷ்ணஸ் பொலிரெக்னிக், 392, நாவ லர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம் 1446

FOR SALE

The following are available for sale in JEDB Estates. Those interested please submit your quotations.

(i) 1100 empty Manure Bags (Veddukadu Estate)

(ii) Coconuts (all Estates)

(iii) 21 Kg. Copra.

AREA SUPERINTENDENT
JEDB, Pallai.
1453

தேவை

உயர்ந்த இன பசுக்கள், பசுக் கன்றுகள் உடனடி யாகத் தேவை. வயது, கறவை அளவு, விலை முத லிய விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய வி லா ச ம்:

அரசாங்க அதிபர்,
உணவு உற்பத்திப் பிரிவு,
கச்சேரி,
முல்லைத்தீவு.
1465

90-வது ஜனன நினைவு

சி. சி. கந்தையா,
(F. M. S. பென்சனியர் சங்கானை)

பிறந்தநாள்: 28-8-1894
மறைவு: 16-11-1959

அன்பிலார் எல்லாம் தமக்
குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
[1441]

வெற்றுச் சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 15,000 வெற் றுச் சாக்குகள் விற்பனை செய்வ தற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் பதிவுத் தபாலில் இடதுபக்கமேல்மூலை யில் 'சாக்கு விற்பனை' எனக் குறிப்பிட்டு 10-9-84ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன் பாக தலைவர், கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு, என்ற விலாசத் திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா 250/- மீளப்பெறக்கூடிய வைப்பும் செய்யப்படல் வேண் டும் தெரிவுசெய்யப்படும் விண் ணப்பதாரர் கேள்விகிடைத்து மூன்று நாட்களுக்குள் பொரு ளைச் சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்துதல்வேண்டும் காரியாலய நாட்களில் வெற் றுச் சாக்கினை சங்கத்தில் பார்வையிடலாம். சங்கத் தில் ரூபா 15/-கட்டி கேள்விப் பத்திர படிவங்கள் பெற்று அனுப்பண்ணவேண்டும். சங்கப் படிவங்களல்லாதவற்றில் வரும் கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தலைவர்.

கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.
24-8-84. 1464

தற்கொலை

(வவுனதீவு)

விடத்தல்முனை வாவிக் கரையில் ஒதுங்கிய 80 வயது மூதாட்டியின் மரணம் தற் கொலை என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

கடைக்குச் செல்ற போது காணுமற்போனஎம். நேசம்மா சித்த சுவாதீன முற்றவராம் சம்பவ தினம் வீட்டை விட்டு வெளியேறிய பின் காணுமற் போய் விட்டாராம். தேடிய பொழுது வாவிக் கரையோரம் இவரது பிரேதம் கரை ஒதுங்கி கிடக்கக் கண்டு எடுக்கப்பட் டது.

மட்டக்களப்பு நகர மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் மரண விசாரணை நடத்தினார். "தற்கொலை" என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த உயர்தர பரீட் சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட் டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றுக மீட் டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக் கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 - 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர் களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞா னம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட் டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் கள். இது எமது திறமைக்குச் சான்றுகும்.

அதிபர்.

தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

வல்வை அகதிகளுக்கு குருநகர் கடற்றொழிலாளர் உதவி!

(பச்சிலைப்பள்ளி)

வல்வெட்டித் துறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் வல்வெட்டித்துறை கடற்றொழில் விரிவாக்க சங் கத்தினிடம் பணத்தினையும் பொருட்களையும் வழங்கி உள் ளது.

வல்வெட்டித் துறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக குருநகர் கடற் றொழில் அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்த நிதியில் ஒரே நாளில் மட்டும் 35 ஆயிரம் ரூபா சேர்ந்தது.

நிதியில் சேர்க்கப்பட்ட பணம் 50 ஆயிரம் ரூபா பெறு மதியான உணவுப் பண்டங் கள் உடை, கிடுகு, தளபாடங் கள் பாத்திரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை கடற் றொழில் விரிவாக்க சங்கத் தலைவர் திரு. வயித்திலிங்கத் திடம் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. பெனடிக்ற் செபஸ்தியாம் பிள்ளை பாதிக்கப்பட்டவர் களுக்கு வழங்குவதற்காகப் பொருட்களையும் பணத்தினை யும் நேரில் சென்று கையளித் தார்.

மதுபோதையில் கிணற்றில் தவறிவீழ்ந்து மரணம்

(கிளிநொச்சி)

மதுபோதையில் கிணற்றில் நீர் அள்ளச்சென்றவர் கிணற் றில் விழுந்து மரணமானார்.

திருவையாறு இரணைமடுப் பகுதியில் வசித்து வந்த இர ண்டு பிள்ளைகளின் தந்தை யான இராமசாமி தங்கவேலு (25 வயது) என்பவரே இவ் வாறு மரணமாகியவராவார். இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதி காரி திரு மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ்கான்ஸ்டபிள் என். இராசசேகரம் ஆஜர் செய் தார். பிரேத பரிசோதனையை மாவட்ட சட்டவைத்திய அதி காரி பி. நவரத்தினராசா மேற் கொண்டார்.

மரணமான தங்கவேலு தினமும் மதுபோதையில்

முதலுதவி சிகிச்சை வகுப்பு

[கல்வியங்காடு]

கைதடி கட்புல, செவிப்புல 'நவீல்ட்' பாடசாலையில் முத லுதவிச்சிகிச்சை சம்பந்தமான வகுப்புகள் தற்சமயம் நடை பெறுகின்றன.

பிரிவு பிரிவாக நடைபெறும் இவ்வகுப்புக்களில் நூற்றுக்கு மேற்பட்டமாணவர்கள்கலந்து கொள்கின்றனர். இவ்வகுப்புக் களை திரு. எம். சுப்பிரமணியம் நடாத்துகின்றார்.

சங்கானை முருகன் உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை கிழக்கு பெரிய வளவு முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் 31ம் திகதி வெள்ளிக் கிழமையன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 8ம் திகதி சப்பரத்திருவிழாவும், 9ம்திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடை பெறவுள்ளன.

எதிர்ப்பு

(திருகோணமலை)

எழுத்தாளர்கள் பு னை ப் பெயரில் பத்திரிகைகளுக்கு எழுதுவதைத் தடை செய்யும் அரசாங்கத்தின் மு டி விற்கு திருகோணமலை மாவட்ட ஐக் கிய பிக்குமார் மண்டலமும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மண்டலத்தின் கூ ட் டம் அண்மையில் தி ரு ம லை பௌத்த விடுதியில் நடை பெற்ற பொழுது எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரேரணையை பலப்பிட்டி சா ந்ததேரோ முன்மொழிந்தார்.

புனரமைப்பு

(சித்தன்கேணி)

சங்கரத்தை கிராம அபி விருத்திச்சங்க புனரமைப்புக் கூட்டம் திரு. ஆ சங்கரப் பிள்ளை தலைமையில் அண்மை யில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கிராம அபிவிருத்தி உத்தியோ கத்தர் திரு. என். தேவநாயக மும், வட்டு கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. ஆ. முருகேசுவும் கலந்து கொண்ட னர். புதிய உத்தியோகத்தர் களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. சங்கரப்பிள்ளை உபதலைவர்கள்: அ. க. வேலுப் பிள்ளை, நா. குருசாமி, செய லாளர் கா. ச. சற்குணனந் தன், உபசெயலாளர்: க. மகேஸ்வரன், பொருளாளர்; நா. ஜெயரஞ்சிதன், கணக் காய்வாளர்: க. ஸ்ரீபாஸ்கரன், செயற்குழு உறுப்பினர்கள்: க. நாகரத்தினம், க. சிதம்பர நாதன், அ. குகசோதி, சு. செல்வக்குமரன், இ. வி. ராஜா, தா. சேனுதிராசா, மு. திருநாவுக்கரசு.

45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26%
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில்
தனது சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
த பிறைன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், போன்: 23680
தலைமை அலுவலகம்:
3-ம் மாடி,
சிலிங்கோ ஹவுஸ்,
கொழும்பு - 1.
மற்றும் ஏனைய
14 கிளைகள் உண்டு.

உலகின் ஆயுதச் செலவு நாளொன்றுக்கு 200 கோடி

மெல்லிக்கோ, ஆகஸ்ட், 27

ஆயுதப் போட்டிக்காக உலகம் 200 கோடி டாலர்களைத் தினமும் செலவு செய்து வருகின்றது.

இராணுவ வட்டாரங்களால் திணிக்கப்பட்டுள்ள ஆயுதப் போட்டி அதிகரித்து வருவதன் விளைவாக உலக மக்களின்மீது மேலும் பெரும் பாரம் சுமத்தப்பட்டுள்ளது

உலகில் தினம் ஒன்றுக்கு 200 கோடி டாலர்கள் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் அதே வேளையில் கோடிக்கணக்கான மக்கள் வறுமை, பசி, எழுத்தறிவின்மை, கொள்ளை நோய்கள் போன்ற கொடுமைகளுக்காளாகியுள்ளனர்.

யுனிடோமகாநாடுமுடிந்தது

வியன்னை, ஆகஸ்ட் 27

வியன்னை ஹொப்பர்க் மாளிகையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தொழில்துறை அபிவிருத்தி ஸ்தாபனத்தின் நான்காவது பொதுமகாநாடு இருநாட்களுக்கு முன்னர் முடிவடைந்தது.

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மகாநாடு, தொழில் வளர்ச்சி பெற்றநாடுகளின் போக்குகளின் காரணமாக, இளம் நாடுகளின்பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்துள்ள சிக்கலான நிலைமைகளில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

''விடுதலைபெற்ற நாடுகளின் வெளிநாட்டுக்கடன் சுமார் 90,000 கோடி டாலர்களை அடைந்துள்ளது. பண்ணுட்டு ஏகபோகங்கள் மேன்மேலும் இளம நாடுகளைச் சுரண்டிவருகின்றன'' என்று பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் குற்றஞ்சாட்டினர்.

இம்மகாநாட்டில் வளர்முக நாடுகளும் சோஷலிஸ நாடுகளும் இணைந்து பல யோசனைகளை முன்வைத்தன. ஐ. நா. தீர்மானங்களுக்கமைய ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஸ்தாபிக்க வேண்டும் என்று அவை கோரின அநீதியான வர்த்தக நடவடிக்கைகளையும் பாதுகாப்புக் கருத்துக்களையும் ஒழித்துக் கட்டவேண்டும் என்று அவை வலியுறுத்தின.

ஆசியான் நாடுகளின் வர்த்தக வளர்ச்சி

மணிலா, ஆகஸ்ட், 27

கடந்த பத்தாண்டுகளில் ஆசியான் நாடுகளிடையே நடைபெற்ற வர்த்தகம் 180 கோடி டாலரிலிருந்து 1480 கோடி டாலராக அதிகரித்துள்ளது. கலாசாரம், கல்வி, விளையாட்டு ஆகியதுறைகளில் ஒத்துழைப்புக்கள் மிக வெற்றிகரமான வளர்ச்சியை அடைந்து வருகின்றன.

ஆசியான்நிறுவனம் இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் பொருளாதார கலாசார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. அண்மையில் புரூணை சுதந்திரம் பெற்றதும் இந்த அமைப்பில் சேர்ந்துகொண்டது.

அதேவேளையில் வளர்ச்சிக்கான சகல வாய்ப்புக்களுமே பூரணமாகப்பயன்படுத்தப்படவில்லை. பல துறைகளில் முன்னேற்றம்காணுவதற்குத்தடைகள் இருந்தன என்று பொருளாதார அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். மறுபுறத்தில் இந்நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடிகளும் பெரும் சவாலாக விளங்கின

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி:

வங்கிஊழியர் விசாரணையில்!

(மட்டக்களப்பு)

சிங்கப்பூரில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக இளைஞர்களிடம் 36-ஆயிரம் ரூபாய் பணத்தைப் பெற்ற மட்டக்களப்பு வங்கி ஊழியர் ஒருவரை பொலிசார் விசாரணைக் குட்படுத்தியுள்ளார்கள்.

ஆரையம்பதியைச் சேர்ந்த பி.ஜெயச்சந்திரன், யோசப் செல்வராஜா ஆகிய இருவரும் விசேட குற்றத்தடுப்புப் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளதைத்தொடர்ந்தேபிரஸ்தாப ஊழியர் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் மட்டக்களப்பில் வங்கி ஒன்றில் கடமை புரிவதால் அறிமுகமானவரென்றும் இவர் சிங்கப்பூரில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி தலா 18 ஆயிரம் ரூபாவரை பெற்று கொழும்புக்கு அழைத்துச் சென்று ஏமாற்றியுள்ளதாக முறைப்பாடுகளில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை திரு எஸ்.ரவீந்திரராஜா மேற்கொண்டு வருகிறார்.

பஸ் ஒய்வூதியக்காரருக்கு மாற்று ஒழுங்கு இல்லையாம்

(பச்சிலைப்பள்ளி)

பஸ் தபால் நிலையத்தில் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படாததினால் ஓய்வூதியம் பெறுவோரும் ஆசிரியர்களும் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

வடபகுதியில் ஓய்வூதியம் பணம் பெறுகின்றவர்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்துப் பணம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் பஸ் தபால் நிலையத்தில் பணம் பெறுகின்றவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படாதது ன், பணம் பெறுவதற்கானஒழுங்குகளும் செய்யப்படவில்லை எனத் தெரிய வருகிறது

பஸ் தபால் நிலையத்தில் சம்பளம் பெறும் பாடசாலைகளுக்கும் சம்பளப்பணம் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை.

பல ஆயிரம் ரூபாய்களுக்கான மணிஓடர்கள் பஸ் தபால் நிலையத்திலிருந்து வழங்கப்பட வேண்டியுள்ள போதிலும், அங்கு பணம் இல்லாமையில் அவை வழங்கப்படவில்லை

பதில் நீதிபதி வீடு தீக்கிரை:

நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''அச்சுவேலி லயன்ஸ்கழகத் தலைவரும், மல்லாகம் பதில் நீதிபதியுமான பி. பாலசிங்கத்தின் வீடு முற்றுக தீக்கிரையாகியுள்ளது. இச்சம்பவம்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுக்கவும்.''

லயன் மாவட்ட ஆளுநர் நவாடி குறூசுடன் தொடர்பு கொண்ட, முன்னாள் உதவி மாவட்ட ஆளுநரும், ஆளுநர் சபை தேசிய 'ஐக்கியத்திற்கு பொறுப்பாயுள்ளவருமான திரு. க. குணரத்தினம், மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அவரின் வீடு முற்றுக எரிந்து விட்டதாகவும், உடைகள், வீட்டிலுள்ள சட்ட நூலகம், பொருட்கள் யாவும் எரிந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

நஷ்டஈடுவழங்கநடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

[க]

வசாவிளானில் பென்ஷன் வழங்கப்பட்டது!

(மாவிட்டபுரம்)

வசாவிளான் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பென்ஷன்காரர்களுக்கு வசாவிளான் தபால் நிலையத்தில் வைத்து பென்ஷன் பணம் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தபால் நிலையங்களிலும் பென்ஷன் பணம் பெற்று வந்தவர்களுக்கு யாழ்.முற்றவெளி மைதானத்தில் வைத்தே பென்ஷன் பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் வசாவிளான் தபால் நிலையத்தில் மட்டும் அப்பகுதி பென்சன் காரர்களுக்கு பென்ஷன் பணம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தபால் நிலையத்தில் சேர்ந்த பணத்தைக் கொண்டு மேலதிகாரிகளின் அனுமதியுடன் இவ்வாறு பென்ஷன் பணத்தை வழங்கி வசாவிளான்பகுதி பென்ஷன் கரர்களுக்கு உதவி செய்த வசாவிளான் தபால் நிலைய அதிபர் திரு. சி. தர்மராஜா அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளதுடன் மேலதிகாரிகளும் பாராட்டியுள்ளனர்.

இந்த பென்ஷன் பணத்தை வழங்குவதற்கு மேற்படி பால் நிலைய விழிப்புக்குழுவினரும் உதவி செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது

வவனியாவுடன் இணைப்பு

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தபால் நிலையங்கள்' உப தபால் நிலையங்கள் வவனியா தபால் அத்தியட்சகர் பிரிவின் கீழ் எதிர்வரும் 19ம்திகதி முதல் சேர்க்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தபால் அலுவலகங்கள் தற்போது யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் பிரிவின் கீழ் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சியில் தபால் அத்தியட்சகர்அலுவலகம்திறக்கப்படும் வரை வவனியா தபால் அத்தியட்சகர் பிரிவின் கீழ்கிளிநொச்சி மாவட்ட தபால் அலுவலகங்கள் இயங்கும் எனத் தெரியவருகிறது

மட்டுநகரில் 'வீடியோ' கொட்டகைகள் வேட்டை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் இயங்கும் 'வீடியோ திரைப்படக் கொட்டகைகள் மீது பொலிசார் திடீர் வேட்டையில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆரையம்பதி, நாவற்குடா, காத்தான்குடி, அமிர்தகழி பகுதியிலுள்ள வீடியோ கொட்டகைகள்முற்றுகையிடப்பட்ட போது ஏராளமானவர்கள் கட்டணம் செலுத்திப் படம் பார்ப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வீடியோடெக் படச்சுருள், தொலைக் காட்சிப் பெட்டி என்பவற்றை பொலிசார் கைப்பற்றி வருகிறார்கள்.

விசாரணையின் பின்பு உரிமையாளர்கள்கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு அபராதம் செலுத்துவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொடுப்பனவுகள் வழங்குவதில் இழுபறி?

(வவுணதீவு)

மண்முனை வடக்கு- மேற்கு பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள 10 லட்சம் வீடுகளுக்கான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிடைப்பதில்லை எனறு புகார் கூறப்படுகிறது, இத் திட்டத்தை அமுல்படுத்துவதில் மட்டக்களப்பு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சில அதிகாரிகள் மந்த நிலையில் செயல்படுகின்றனராம் அலுவலக மட்டத்தில் நடைபெறும்'இழுபறி' காரணமாக திட்டமிட்ட அடிப்படையில் வீடுகளை நிருமாணிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகப் புகார் கூறப்பட்டுவருகிறது.

வீட்டுத் திட்டத்திற்கான கொடுப்பனவுகள் காலதாமதமாக வழங்கப்படுவது குறித்து திமிலைதீவு கிராமோதயசபைத் தலைவர் திரு. ஜி. பிள்ளை மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரியை சந்தித்து நிலைமையை நேரில் சுட்டிக் காட்டினர்.

''திருமலை மாவட்டத்தில் பஸ் சேவை சீர்குலைவு''

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பஸ் சேவைகள் சீர்குலைந்து போயுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீசன் டிக்கட் வைத்திருப்போரும் மாணவ, மாணவியரும் சீர்கெட்ட பஸ் சேவையினால் கஷ்டம் அடைந்துள்ளனராம்.

பஸ்சேவையை அபிவிருத்தி செய்ய கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திருமலை பிரதேச சபை கோரியுள்ளது.

சபையின் கூட்டம் அண்மையில் திரு. ஜே. பி. பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்ற சமயம் இதுசம்பந்தமான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மட்டுநகரில் ஆசிரியர்களுக்கு சேவைக்கால புத்தகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்களுக்கு சுயவிபர சேவைக்கால புத்தகங்கள் வட்டாரக் கல்வி அதிகாரிகளின் மூலம் வழங்கப்பட்டுவருகின்றன.

மேற்படி புத்தகம் கிடைக்கப்பெற்ற ஆசிரியர்கள் தங்கள் சேவை விபரங்களை 01 - 04 - 1970 தொடக்கம் பதிவு செய்து அதிபரின் சிபார்சுடன் வட்டாரக்கல்வி அதிகாரியினால் மேற்கொள்ளப்படும் பாடசாலை வருடாந்த விபரத்திரட்டு விஜயத்தில் அவரிடம் ஒப்படைத்து ஒப்பம் பெறவேண்டும்.

இந்த சுயவிபர சேவை புத்தக திட்டம் அமுலுக்கு கொண்டுவருவதால் ஓய்வூதிய கொடுப்பனவு தாமதங்கள் நீங்கிவிடுமென்று கருதப்படுகிறது.

மணிவாக்கு

பெண்ணிற்குச் சிறந்த அணிகலம் அடக்கமே. ஆடம்பரம் அழிவில்தான் கொண்டுசேர்க்கும்.

— ஸ்ரீ சாரதா தேவியார்

நமது நோக்கு

வெளிநாட்டு வேலை விலைகொடுத்தாக வேண்டும்?

டுபாயில் மாரடைப்பினால் இறந்த ஒருவரின் சடலம் ஊர் வந்துசேர நாற்பத்து ஐந்துநாட்கள் எடுத்த சோகக்கதையை 'ஊடுருவி' எங்கள் நேற்றைய பிரசுரத்தில் விபரமாகச் சொல்லியிருக்கிறார்.

இறந்தவர் கிரேக்கக்கப்பலில் வானொலி அதிகாரியாகக் கடமையாற்றினவர். இயற்கை மரணம் எய்திய இவரின் சடலம் உடனடியாக அனுப்பிவைக்கப்படுமென்று கப்பல் உரிமையாளர்கள் சொன்னபோதும் இந்த நீண்டகாலத்தின் மர்மம் என்ன?

இவ்வித சம்பவங்கள் சர்வசாதாரணம் என்ற நிலை இன்னும் ஏற்படாவிட்டாலும், வெளிநாட்டுவேலைக்கு பேராபத்துஉண்டென்பதை இதுபோன்ற, இதிலும் மோசமான நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

சென்னை விமான நிலையத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் தப்பிவந்த தாய்மார் தங்கள் உணர்ச்சியை விளக்கியபோது வெளிநாட்டு வயிற்று வளர்ப்பை கனவிலும் நினைப்பதில்லை என்றனர்.

பொதுமக்களிற் பலர் இவ்வித அவலத்தை தத்துவரீதியில் அணுகுவது நாமறியாத ரகசியமல்ல.

''எங்கிருந்தாலும் நடக்க விருப்பது நடந்தே தீரும்'' என்ற ஆப்த வாக்கியத்தை நாம் ஆட்சேபிப்பது அவசியமல்ல.

நூற்றுக்கணக்கான மக்கள் இந்த வெளிநாட்டுச் 'சூதாட்டத்'தில் தோல்வியடைகின்றனர். திரைகடலோடித் தேடிய திரவியத்தை அனுபவிக்க திரும்பி வரவேண்டுமே. அதற்கு உண்டான முட்டுக்கட்டைகள் அகற்றமுடியாதவையா?

மேற்கு ஆசிய நாடுகள் இன்று பொன் சுரங்கங்களாக மாறியிருக்கின்றன. 1978இல் 20,000 இலங்கையர் அந்நாடுகளில் வேலைசெய்வதாக சர்வதேச நிதி ஸ்தாபனம் புள்ளி விபரம் கொடுத்திருக்கிறது. இன்று அத்தொகை லட்சக்கணக்கில் பெருகி இருப்பதை எவரும் கற்பனை செய்யமுடியும்.

சொந்தஊரில் ஆரம்பமாகும் தொல்லை வேலையில் அமரும்போது அதிகரித்து வேலைக் கால எல்லையில் பன்மடங்கு பெருத்து, ஊர் திரும்பி வந்தும் தொடருவதானால், இந்தத் துன்பியல் நாடகத்தில் மோகம்கொள்வதேன்?

எல்லாச் செலவுகளையும் - காத்திராப்பிரகாரமான மரணம், அதன் தொடர்பான பல இடர்கள் உட்பட - எல்லாவற்றையும் தள்ளிக் கணக்குப் பார்த்தால் உழைப்பின் பெறுமதி நிதி அளவில் உருப்படியானதே. குத்துவிளக்கில் கணக்கு கவலையான சூழ்நிலையிலும் உற்சாகமளிக்கும் தன்மையது.

சொந்தநாட்டின் அபிவிருத்திஒருபுறமிருக்க, இதனை விட்டு வெளியேறத் தூண்டும் காரணங்கள் பலதரப்பட்டவை.

தமிழ் மக்கள் மட்டும்தான் பெருமளவில் வெளியேறுகிறார்களென்பதற்கு இல்லை. பல வசதிகளை விரும்புவோர் எந்த இனமானாலும் வெளிநாடுகளில் விரிவடைந்த பலதரப்பட்ட தொழில்களைத் தேடிப்பெறுகின்றனர்.

நாட்டின் இன்றைய நிதி நிலைமையில் அரசாங்கம் இதனைத் தடைசெய்யவில்லை. இதற்கு உடன்பாடாகவிருக்கிறதென்றே சொல்லலாம்.

எனவே பெரிய சிறிய தொழில்களைத் தேடிப்போகும் இப்பட்டாளத்துக்கு பொருத்தமான அமைப்பு நிர்வாக ரீதியில் செயற்பட வில்லையென்பதை நாம் தொடக்கத்தில் தொட்டஉதாரணம்வெளிப்படுத்துகின்றது

இறந்தவர் ஒரு தமிழன் என்ற காரணத்தால் இந்தக் கொடிய தாமதம் ஏற்பட்டதென்றுகொள்ள இடமில்லை. வெளிநாட்டு வேலையில் இனப்பாகுபாடு இல்லை என்று அடித்துக்கூறமுடியாவிட்டாலும், மரணம் போன்ற மோசமான விவகாரங்களில் மனிதாபிமானம் முற்றும் செத்துவிடுமென்று நம்புவதற்கில்லை.

ஒன்று தெளிவாகின்றது; வெளிநாட்டு உழைப்பு நாட்டுக்குத் தேவை. ஆனால் உழைப்பாளிகள் நலனைப் பேணும் நிர்வாகம், வெளிநாட்டு விவகார அமைச்சில் நித்திரைக்குப் போய்விடுவது போலத் தெரிகிறது.

குறிப்பிட்ட சம்பவத்தில் 45 நாளுக்குப் பின்னராவது பூத உடல் நாடு வந்து சேர்ந்தது; சில சமயங்களில் தகனக் கிரியைகள் வெளிநாட்டிலே நடந்தேறியபோதும்ஊரில்நடக்க வேண்டிய சமயக்கிரியைகளுக்கு இறந்தவரின் அஸ்தி தேவைப்படும். அஸ்தியை பவுத்திரமாகக் கொண்டு வரும்போதும் அதனைத் தவருக் கணித்து உரியவர்களுக்கு அது கிடையாது பறிபோவதும் உண்டு.

வெளிநாட்டு வேலை! அப்பப்பா என்ன விலை கொடுத்தாகவேண்டியிருக்கிறது. சென்னையிலிருந்து தப்பிவந்தவரின் தீர்ப்பு-கனவிலும் இதனை நினைப்பதில்லை- தற்காலிகமானதென்று கொள்ளவேண்டும். பிரசவ வேதனையில் இதுபோன்ற முடிவு எத்தனை

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண்பதில் உண்மையில் ஆர்வமுண்டா?

''தமிழ் ஈழக்கோரிக்கைக்கு ஈடான உகந்த ஒரு மாற்றுத் திட்டம் மாகாணசபை ஆட்சி முறையே. வட்டமேசை மகாநாட்டில் கூட இதற்குப்பெரும் பாலான ஆதரவு உண்டு'' என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், ஈழத்தின் முதுபெரும் அரசியல் வாதிகளில் ஒருவரும் பெயர் பெற்ற சட்டத்தரணிகளில் ஒருவருமான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கடந்தவாரம் கருத்து வெளியிட்டிருந்தார். இனப்பிரச்னைக்கு ஒரு நல்ல நிரந்தரமான தீர்வு காண்பதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு இன்னமும் ஒரு முடிவும் காணுமல் பல்வேறு அபிப்பிராயங்களையும் எடுத்துக்கூறி பல தரப்பினரும் மகாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்யும் காட்சியையே இதுவரை காணக் கூடியதாக இருக்கிறது. இன்னும் இழுபறிநிலையிலிருக்கும் இந்த மாநாட்டின் இன்றைய நிலை என்ன என்பது பற்றி எடுத்துக்கூறுவதற்காக டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

''அதிகாரப் பரவலாக்கலின் கீழ் பிரதேச அமைப்புக்களை நிறுவுவதுபற்றி ஆராய்வதற்காக உபகுழுவொன்றை மகாநாடு நியமித்தபின் அரசாங்க மேலிடம் சொந்த விருப்பத்தின் பேரில் இரண்டாவது சபையை அமைக்கும் யோசனையை முன்வைத்தது கவலைக்குரியது'' என்று தெரிவித்த டாக்டர் கொல்வின், இரண்டாவது சபை யோசனை இனப் பிரச்னையைத் தீர்க்காது''என்றும் தெரிவித்தார். இந்த அரசாங்கத்தால் இனப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதே தனது கருத்து என்றும், டாக்டர் கொல்வின் கூறியிருக்கிறார்.

சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்

பதவி போன பின்தான் பலருக்கும்ஞானம் பிறப்பதுண்டு.

எஸ். எம். ஜி.

1970-ம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகக் கொண்டு புதிய அரசியல் அமைப்புப்பற்றி ஆராய்ந்து உருவாக்கியது. புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்புவாய்ந்த அமைச்சராக டாக்டர் கொல்வின்ஆர். டி.சில்வா நியமிக்கப்பட்டிருந்தார். இந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் நான்கு தமிழ்க்கட்சிகள்சார்பில்கலந்து கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் பிரதேச சுயாட்சியை அடிப்படையாகக் கொண்ட 'அடிப்படைப் பிரேரணைகளைச் சமர்ப்பித்துப்பேசினர். அவர்கள் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகள்பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாததால் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் தொடர்ந்து கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என்று கூறி தமிழரசுக் கட்சியினர் வெளியேறினர்.

அச்சமயத்திலேயே பிரதேச சுயாட்சியை அடிப்படையாகக் கொண்ட பிரேரணைகளை ஏற்று புதிய அரசியலமைப்பை உருவாக்கியிருந்தால்இனப்பிரச்னை இன்றுஇந்தஅளவுக்குபூதாகாரமாக உருவெடுத்திருக்கமாட்டாது. அன்றைய அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் இன்றைய ஆளும் கட்சியைச் சேர்ந்த பலரும் அங்கம் வகித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனப் பிரச்னைக்கு நல்லதொரு தீர்வுகாண்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை டாக்டர் கொல்வின் அன்று தவறவிட்டுவிட்டார்.

இரண்டாவது சபைக்கு தூண்டுதல்

''இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இரண்டாவது சபை யோசனை உதவமாட்டாது'' என்று டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா சென்ற வாரம் கருத்து வெளியிட்ட பின்னர் இரண்டாவது சபை யோசனைக்கு பெரும்பாலும் ஆதரவு பெருகிவருகிறதென்றுஅரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் அரசியல் விமர்சகர் எழுதுகிறார். அதே பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கம் 'இரண்டாவது சபை யோசனைக்கு ஆதரவு அதிகரித்துவருவதாகவும் அந்தச் சபைதான் நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க உதவக்கூடியதென்றும் ஆதரவு திரட்டுகிறது.

தமிழ்பேசும் மக்களின் இன்றைய அவசரத் தேவை

இரண்டாவதுசபையோசனை சம்பந்தமாகவும் பிரதேச சுயாட்சி சம்பந்தமாகவும் கடந்த 21 ஆந் தேதி நடந்த வட்மேசை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

''ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டிருக்கும் இரண்டாவது சபையோசனை, ஒரு புறம் மாவட்ட சபைகளையும் மறுபுறம் பிரதேசசபைகளையும் இணைக்கும் ஒரு பால

(5-ம் பக்கம் பார்க்க)

மக்கள் கருத்து

மரவள்ளியில் புதுவிதநோய்

யாழ்ப்பாணத்தில் விதை வெங்காயத் தட்டுப்பாடு நெல் உற்பத்திப்பாதிப்பு, நாட்டு நிலைமைபோன்ற பல்வேறு காரணங்களால் இவ்வாண்டு மரவள்ளிச் செய்கை அதிகளவில் இடம்பெற்றுள்ளது. உற்பத்திச்செலவு ரொக்கற் வேகத்தில்உயர்ந்து வருவதால், ஊடுபயிராக மரவள்ளியை நாட்டி கிருமிநாசினிச் செலவு இல்லாமல் உற்பத்தி கண்டுவந்தார்கள். அண்மைக்கால வரலாற்றில் இப்போதுதான் மரவள்ளி மரத்திலும் பூஞ்சணவன் போன்ற நோய்பரவி அதன் உற்பத்தியையும், சுவையையும் பெருக்கத்தையும் வெகுவாகப்பாதிக்க ஆரம்பித்திருக்கிறது, இதனால் உற்பத்திக்குத் தேவையான மரவள்ளியை பெற்றுக் கொள்வது கஷ்டமாகவிருக்கிறது.

மரவள்ளியில் பரவிவரும் இந்நோய் பற்றி எமது விவசாயத் திணைக்களம் கண்டு கொள்ளாமல் இருக்கிறதாகத் தெரிகிறது. இத் திணைக்களம் அதன் செயற்பாடுகளைத் தம் பணிமனையில் கடதாசியில் வடித்துக் கொண்டிருக்காமல், தமிழ் நாட்டை முன் உதாரணமாகக் கொண்டு வெளிகள சேவைகள் மூலம் விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை செய்கை முறை மூலமும், செய்திச் சாதனங்கள் வழியாகவும் அவ்வப்போது வெளியிட்டு உதவ வேண்டும்.

கி. இராசா,
ஊரெழு.

முஸ்லிம் மக்கள் முன்னணி அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் மக்களின் மூத்த தலைவர் சேர். ரஸீக் பரீத்தின் மறைவுக்கு முஸ்லிம் மக்கள் முன்னணி அனுதாபம் தெரிவித்துள்ளது.

இவரது மறைவு முஸ்லிம் உலகிற்கு பேரிழப்பாகும்.

இன்று சந்நிதி 3ம் திருவிழா

சந்நிதி செல்வோம்

ஆவணி மாதம் அமாவாசை நன்னாள்
சந்நிதிவேலன் கொடியேற்றம்
பூமணி அழகும் புதுமலர் மணமும்
தொண்டைமான் ஆறெங்கும் பொலிந்தோடும்
காவடி வரவும் கரகங்கள் அசைவும்
தீமிதி காட்சியும் தினம் நடக்கும்
பூவடி காணப் பொழி அருள்தேடப்
போற்றுவோம் புரஞுவோம் புகழ்கேட்போம்!

மேலைப் புலோலி
மு. சு. கதிர்காமத்தம்பி

இன்று ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம் கொடியேற்றம்

மருவு புகழ் மீனாட்சி பாதம் போற்றி

எழுபதியின் நடுவணது ஊரெழுவின்
இலங்குமுயர் அந்திராணிப் பதிவாழ்கின்ற
மருவு புகழ் மீனாட்சி பாதம் போற்றி
வந்தனைகள் செய்வார்க்கு உண்டே மாட்சி
தெளிவுறு மனமும் நல்லறிவுந் தந்து
தேசம் புகழ் நல்லோராய் வாழவைக்கும்
அருள்மருவு மீனாட்சி அமருங் கோயில்
அடியார்க்கு என்றென்றும் அபயந்தானே!

—ஊரெழு செ. சக்திதரன்

யாழ். பென்ஷன்காரர் படும்பாடு

காலை ஆறுமணிக்கே

ஆலமரத்தின்கீழ் கூடுகின்றனர்!

அச்சுவேலி ஓய்வூதியக்காரர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று அளவெட்டி கோப்பாய் பகுதியில் உள்ளார்வகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அச்சுவேலியைச்சேர்ந்தவர்கள் நேற்றுக் காலை ஓய்வூதியம் எடுக்க வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அச்சுவேலி தபால் கந்தோர் கடந்த சனிக்கிழமை தாக்கப்பட்டதால், ஓய்வூதியம் பெறுவோரின் 'வவுச்சரைப்' பெற முடியாமல் போய் விட்டதாலேயே, அவர்களுக்கு நேற்று ஓய்வூதியம்வழங்கப்படவில்லை. விசாரணைக்காக அச்சுவேலி தபால் கந்தோர் பூட்டப்பட்டிருப்பதால், ஓய்வூதியம் பெறுவோரின் 'வவுச்சர்களை' யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு கொண்டுவரவில்லைஎனக் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை 6 மணிமுதல் ஓய்வூதியம் பெறுவோர் யாழ் முனியப்பர் கோவில் வாசலில் உள்ள ஆலமரத்தின் கீழ் கூடி விட்டனர்.

காலை10-30 மணிவரை அவர்கள், கூட்டம், கூட்டமாக, ஆலமரத்தின் கீழ் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

காலை10-30மணிக்கே தபால் கந்தோர் உத்தியோகத்தர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 140 ஓய்வூதியக்காரர்கள், ஏற்கனவே, அளவெட்டி தபால் கந்தோரில், தங்கள் 'வவுச்சர்'களைப் பெற்று, முத்திரை ஒட்டிச் சமர்ப்பித்ததினால், அவர்களுக்கு சிரமம் ஏற்படவில்லை.

கோப்பாய்ப் பகுதியைச்சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் நேற்றுக்காலை துரையப்பா விளையாட்டரங்கிலேயே 'வவுச்சர்' பத்திரங்களை பெற்றுக் கொண்டனர்.

சில வயோதிபர்கள், அளவெட்டி, கோப்பாய் பகுதிகளிலிருந்து வாடகைக் கார்களில் வந்திருந்தனர்.

ஓய்வூதியம் பத்துப் பத்துப் பேராக அழைக்கப்பட்டு, வழங்கப்படுகிறது.

இமமாதம் 3 ம் தேதிவரை துரையப்பா விளையாட்டரங்கில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

(க)

முல்லைத்தீவிலும்

போத்தல் கள் தொழிற்சாலை!

[கொழும்புத்துறை]

யாழ், மாவட்டத்தைப் போன்று முல்லைத்தீவிலும் பாரிய கள் போத்தலடைப்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசாவின் முயற்சியைத் தொடர்ந்து முல்லைத்தீவில் இப்போத்தலடைப்புத் தொழிற்சாலை உருவாக்கப்படவிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இக் கள் போத்தலடைப்புத் தொழிற்சாலைக்கென ஒன்றரை லட்சம் ரூபா இலங்கை பனை அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலையை நிறுவுவதற்கென முல்லைத்தீவு தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச்சங்கம் தனக்குச் சொந்தமான தாளவாய்க்கால் என்னுமிடத்திலுள்ள ஒன்றேமுக்கால் ஏக்கர் நிலத்தைப் பனை அபிவிருத்திச் சபைக்கு வழங்க முடிவு செய்துள்ளது.

செப்டம்பர்மாத முடிவுக்குள் இப்போத்தலடைப்புத் தொழிற்சாலைக் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. கே. ஞானச்சந்திரன் அறிவித்துள்ளார். இத் தொழிற்சாலை முல்லைத்தீவு தெங்கு-பனம்பொருள் கூட்டுறவுச்சங்கத்திடம் கையளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பனையில் உற்பத்தியான பனந்தும்பு

ஜப்பானுக்கு ஏற்றுமதி!

பனம்பொருள் நிபுணர் சம்பந்தம் தகவல்

(கொழும்புத்துறை)

''பனையில் உற்பத்தி செய்யப்பட்ட பனந்தும்பு நல்ல தரமானது என்று ஜப்பான் நாட்டின் பாராட்டைப் பெற்றுள்ளது. இப்பனந்தும்பிற்கு ஜப்பானிலிருந்து கிடைத்த கோரிக்கையைத் தொடர்ந்து முதற்கட்டமாக ஒருதொன் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. இலங்கை பனை அபிவிருத்திச் சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது''

இத்தகவலைக் காமன்வெல்த் விசேட ஆலோசகரும், இந்திய பனம் பொருள் நிபுணருமான திரு. கே. சம்பந்தம் நமது நிருபரிடம் தெரிவித்தார். பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் முயற்சியைத் தொடர்ந்து மேலும் ஒருவருட காலம் இலங்கையில் சேவையாற்றுவதற்குப் பணிக்கப்பட்டுள்ள திரு. கே. சம்பந்தம் இலங்கை பனை அபிவிருத்திச் சபையில் தனது கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்.

காமன்வெல்த் ஆலோசகர் திரு. சம்பந்தம் தொடர்ந்து கூறியதாவது;

''பனந்தும்பு உற்பத்தியிலும், ஏற்றுமதி நடவடிக்கைகளிலும் இலங்கை பனை அபிவிருத்திச் சபையும், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் கூடுதல் கவனம்செலுத்தி வருகின்றன. தும்பு ஏற்றுமதியில் பனை அபிவிருத்திச்சபை வெற்றி கண்டுள்ளது. பனந்தும்பு கிடைக்கும் இடங்கள் எல்லாவற்றிற்கும் நான் நேரில் சென்று பார்வையிட்டேன் பனந்தும்பு கிடைக்கும் பகுதிகளில் அவ்வப்பகுதித் தெங்கு-பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் பனந்தும்பு உற்பத்தித்துறையை மேற் கொள்ளுமாறு ஊக்குவிக்கப் பட்டுள்ளன.

பனந்தும்பு சுத்திகரிக்கும் பயிற்சிக்கு மானியம் வழங்க வேண்டுமென்று செய்யப்பட்ட சிபார்சை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து பனை வெல்லம் அனுப்பிவைக்குமாறு இந்தியாவுக்குக் கோரிக்கை கிடைத்தது. ஆனால் அமெரிக்கா கோரியளவு பெருந்தொகை பனம் வெல்லத்தை இந்தியாவினால் ஏற்றுமதி செய்யமுடியாது போய்விட்டது. இதனால் இந்தியாவும், இலங்கையும் சேர்ந்து பனம் வெல்லத்தை ஏற்றுமதிசெய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்கா பனம்வெல்லத்தைப் பவுடராகக் கோரியதினால் இதற்கான ஆராய்ச்சிகள் அப்போதுமுடியாததால்உடன் அனுப்பமுடியவில்லை. தற்போது இந்தஆராய்ச்சிமுடிந்து விட்டதால் பனம்வெல்லத்தை மாவாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்ய வழிசெய்யப் பட்டுள்ளது.

'சிவா'

தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''அன்னையர் முன்னணி கடந்த வெள்ளிக்கிழமைநடத்திய ஊர்வலத்தில் நான் கலந்துகொண்டதாக யாரிடமும் கூறவில்லை. அப்படி யாராவது பிரசாரம் செய்திருந்தால். அதற்கு நான் பொறுப்பில்லை. தாய்மார் நடத்திய மனதை உருக்கும் அந்த ஊர்வலத்தைப் பெருமையுடன் பார்த்துக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன்''

இவ்வாறு; தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகும் என்ற கருத்தை நாங்கள் ஏற்கமுடியாது. அதிகாரப்பரவலாக்கலையும் சுயாட்சியையும் கொண்ட ஓர் இணைப்புச் சபையாக அது எப்படி விளங்க முடியும் என்பது எமக்குப் புலனாகவில்லை. தற்போதுள்ள நிலையில், அந்தச் சபையானது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் மத்தியில் குவிக்கும் நடைமுறையை வலுப்படுத்துவதாகவே இருக்கிறது. அத்தோடு நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் மற்றொரு நடவடிக்கையாகவும் தென்படுகிறது.

''தமிழ் பேசும் மக்களின் இன்றைய அவசரத்தேவை அவர்களது உயிர்களுக்கும் உடமைகளுக்கும்பாதுகாப்பே, இதனை உறுதிப்படுத்த வேண்டுமானால், அவர்களது பாரம்பரியதாயகத்தின் நிலைப்பாடும் ஒற்றுமையும் கட்டிப்பாது காக்கப்பட வேண்டும். அத்துடன் அவற்றின் அரசியல் ஆதிக்கமும் ஸ்தலசட்ட ஒழுங்கும் அவர்களுக்கு உறுதி செய்யப்படவேண்டும். பொருளாதார அபிவிருத்தி, குடியேற்றம் என்பவையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இத்தனையும் உள்ளடக்கிய கட்டுக்கோப்பு சர்வகட்சி மாநாட்டின்போது சுயாட்சி யோசனை மீது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த யோசனைகளில் அடங்கியிருக்கிறது. இந்த அம்சங்களை உள்ளடக்காத எத்தகைய தீர்வும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்காது'' என்று திரு. அ. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினர்.

மாற்றுத் திட்டம் வைத்தால்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலையையும் இதே மாநாட்டில் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

''எங்களைப் பொறுத்தமட்டில் எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மாற்றுத்திட்டம் ஏதாவது சமர்ப்பிக்கப்பட்டால் நிச்சயமாக நாம் அவற்றை மக்கள் முன் வைப்போம். அவ்வாறான மாற்றுத்திட்டம் எதுவும் உருவாகாதவிடத்து அடக்கு முறையிலிருந்து எமது மக்களை விடுவிக்க நாம் அகிம்சை வழியில் எமது போராட்டத்தை நடத்துவதைத்தவிர வேறுவழியில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்'' என்று திரு. அமிர்தலிங்கம் தெளிவுபடத் தெரிவித்திருக்கிறார்.

இவற்றுக்குப் பின்னர் தான் இரண்டாவது சபை யோசனைக்கு ஆதரவு அதிகரிப்பதாக அரசாங்கக்கட்டுப் பாட்டிலுள்ள 'டெயிலி நியூஸ்' எழுதுகிறது,

இனப்பிரச்சனைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அக்கறை அரசுக்கு இருக்குமானால் பல்வேறு யோசனைகளையும் வைத்து ஆலோசனை நடத்திக் கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டு போகுமா?

இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணமுயற்சி செய்வதாகக் கூறும் அதே சமயம் கிழக்கு மாகாணத்தில் கல்குடாத்தொகுதியில் அத்துமீறிக்குடியேறிப் பின்னர் வெளியேற்றப்பட்டவர்களை வடபகுதியில் நெடுங்கேணியில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வவுனியாவின் ஒருபகுதியையும் பதவியா உதவிஅரசாங்க அதிபர் பிரிவையும் மதவாச்சியுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் கூறப்படுகிறது!

வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் சற்றும் ஓயவில்லை.

இந்நிலையில் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு விரைவில் காண்பதற்கான முயற்சிகளில் அரசு உண்மையில் ஆர்வத்துடன் செயல் படுகிறதென்று நம்பலாமா?

திருப்பணி வேலைகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு சட்டம்பித்துறை விவாகப் பெருமாள் முருகன் ஆலயத் திருப்பணி வேலைகள்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய வசந்த மண்டபம் நிறுவப்பட்டு முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இவ்வாலயத்தில் வெள்ளிக் கிழமை தோறும் பஜனையும், கூட்டுப் பிரார்த்தனைகளும் நடாத்தப் பட்டு வருகின்றன.

மகாபொல ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

மகாபொல ஐந்தாவது வருடாந்த விழா அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 18ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்பிட்டியா தொகுதியிலுள்ள எல்பிட்டியா மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில்'மகாபொல'வருடாந்த விழாநடைபெறும்.மகாபொல விழாவில் பங்கு பற்றுவதற்கான ஆயத்தங்களை மேற் கொள்ளுமாறு யாழ், மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் கேட்கப்பட்டுள்ளன.

உ

முருகா

சிவநேயச் செல்வர்களே!

நல்லைக் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் திருமுறை முதலியவற்றை ஓதியும், பஜனை செய்தும் சிறப்பித்த அடியார்களை அழைத்து,செப்ரெம்பர் முதலாம் திகதி (1-9-84) சனிக்கிழமை மகேசுர பூசை செய்ய நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் திருவுளங் கொண்டுள்ளார்கள்.

அத்தருணம், திருமுறை ஓதல், பஜனை செய்தல் ஆகியவற்றில் பங்குபற்றிய அடியார்களுடனும் இத்தெய்வப்பணியில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்களுடனும் கலந்துரையாடி, இச்சீரிய பணி மேலும் சிறப்புற எவ்வாறு இவ்வடியார்களும், அன்பர்களும் உதவலாம் என அவர்களின் ஆலோசனையையும் ஆதீன முதல்வர் பெறவுள்ளார்கள்.

ஆதலின் இவ்வடியார்களும் அன்பர்களும் 1-9 84 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆதீனத்திற்கு வருகைதந்து, கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் மகேசுர பூசையிலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்னூர் அனைவரையும் அன்புகொண்டு அழைக்கின்றோம்.

வருகை தரும் அடியார்கள் அன்பர்கள் தமது வருகைபற்றி கடிதமூலமாகவோ தொலைபேசிமூலமாகவோ 30-8-84 வியாழக்கிழமை மாலை 6-00 மணிக்கு முன்னதாக ஆதீனத்திற்கு அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்

நிர்வாகி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி,
நல்லூர், 27-8-84.
தொலைபேசி: 24018

விளம்பர உபயம்: யாழ். குளோபல்

ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

கிரான் ஆச்சிரமப் பகுதியில் குடியிருப்பு வசதி

(அரியாலை)

''1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் தென்னிலங்கையில் இருந்து மட்டுநகர் கிரான் ஆச்சிரமப்பகுதியில் வந்து சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்குக் குடியிருப்பு வசதி களைச் செய்துகொடுக்க ஆச்சி ரமக் காணியில் 5 ஏக்கரை ஒதுக்கிக்கொடுத்துள்ளோம். இக்காணியில் இதுவரை கட்டி முடிக்கப்பட்ட 12 வீடுகளை 12 குடும்பங்களுக்கு வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வளித் துள்ளோம். இன்னும் சுமார் 25 வீடுகள் வரை சட்ட ஏற் பாடுசெய்துவருகிறோம்.''

இவ்வாறு சுன்னுகம் கிறீஸ் தவ சேவ ஆச்சிரமத்தின் ஆண்டு விழாவில் ஆச்சிரமம் கடந்த ஆண்டில் ஆற்றிய பணிகள் குறித்து நடந்த கலந்துரையாடலில் ஆச்சிர மத்தின் பிரதம சேவக் அருட்திரு. சாம்-அல்பிரட் அடிகளார் பேசுகையில் குறிப் பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசு கையில்: ''ஆச்சிரமத்துக்கு மேற்குப்பக்கமாக அமைந்தி ருக்கும் 50 வீடுகளைக்கொண்ட குடியிருப்புத் திட்டத்தில் சுமார் 625 பேர் வசிக்கிறார் கள். அப்பகுதியில் நீண்ட நாட்களாக இருந்துவந்த குடி நீர் பிரச்னையைத் தீர்த்து வைக்கக் கிணறு ஒன்றை அமைத்து அப்பகுதி மக்கள் குழாய் மூலம் நீர் பெறுவதற் கான ஒழுங்குகளைச் செய்ய ஏற்பாடுசெய்துவருகிறோம். அத்துடன் அப்பகுதியில் ஒரு நூல் நிலையமும், ஒரு சிறுவர் பாடசாலையும் நிறுவி அவர் களுக்குப் புதிய வாழ்வு ஒன்றை அளிக்கவும் ஏற்பாடு செய்துவருகிறோம்'' என்று கூறினார்.

தென்னிந்திய திருச்சபை யின் யாழ். திருமண்டலத்தி னுல் ஆச்சிரமத்தில் நிறுவப் பட்டு செயல்பட்டுவரும் இறையியல்பயிற்சிநிலையத்தை நிரந்தரமாக நிறுவி தலை நடாத்த யாழ். திருமண்டலப் பேராயர் அம்பலவாணர் ஆண்டகை ஏற்பாடுசெய்து வருகிறார்.

இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—12(28-08-1984)
வாரம்—செவ்வாய்
திதி—துதியை இரவு 9-14 வரை
நக்ஷத்திரம்—பூரம் காலை 6-23ன் மேல்உத்தரம்

மேடம்:- அதிக ஆசையி னால் அவஸ்தைப் படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களில் மோட்டிக் கொள்ளலாம் சில ரின் குறுக்குவழித்தலையீடு உங்கள் கோபத்தைக்கிளறி விடும்.

இடபம்:- எண்ணத்தின் போக்குதல் நெஞ்சத்தைப்புண் ணுக்கும் அற்பவிடயத்திற்குக் கூட பொல்லாங்கு கேட்க நேரிடும் தனி வழியில் நாட் டம் செலுத்துவீர்கள் சீறி விழும் கோபத்தை அடக்கவும்.

மிதுனம்:- அலைமோதும் மனத்துடன் அமைதிகுன்றும் நிலைவீசும் எதிரிகளும் காத் திருப்பர் சகோதரவழியால் மனதில் சஞ்சலம் ஏற்படும்.

கடகம்:- வாகனம் செலுத்து வோர் வாழ்வில் இன்று வெற் றித்திருநாள் எதிலும் அதி ஸ்டங்கள் உங்கள் பக்கம் திரும்பும் வெளியிடத் தொடர் பும் இன்று கிடைக்கும்.

சிங்கம்:- மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கும் பிரிந்தவர் வாழ்வில் மீண்டும் இணைவார்கள் குடும்பத்தில் உறவு நெருங்கியதாகஇருக்கும் பொன்னைதினம்.

கன்னி:- கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும் எதிரிகள் சதி செய்யக்காத்திருப்பர் ஆயுதபீடைக்கும் இடமளிக்க நேரிடும் எதிலும் அவதானம் வேண்டும்.

துலாம்:- ஏக்கத்தின்சாயல் தாக்கும் எதிர்பாராத வித மாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும் உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

விருச்சிகம்:- காதல் விவ காரங்கள் தலைதூக்கும் இனி மையான எண்ணங்கள் நடை பெறும் களஸ்திரவழியால் புக முண்டு பெரியோர் ஆதரவும் உண்டு.

தனுசு:- வித்தையில்வெற்றி காணுவீர் வேண்டியது கிடைக் கும் நுட்பமான தொழிலில் பாராட்டுக்கள் கிடைக்கும் சிலநடவடிக்கைகள் மூலம் பணலாபத்தை தேடிக்கொள் வீர்கள்.

மகரம்:- எவ்விதத்திலும் நன்றாக ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும் ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பை தேடித்தரும் முக மன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கை வேண்டும்.

கும்பம்:- தன்மானத்துடன் தனவரவிற்கும் இடமுண்டு குடும்பத்தில் தென்றல்வீசும் உறவினர்கள் படையெடுத்து வருவார்கள் கல்வியில் முன் னேற்றமுண்டு.

மீனம்:- நினைத்தகாரியத் தில் வெற்றியுண்டு பகைத்த வர்களே பாராட்டுவார்கள் பணவிவகாரத்தில்நல்லதிருப்ப முண்டு புதுமையான சப்பவங் கள் இடம் பெறும் விருந்தி னர் வருகையுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

வர்த்தக வள்ளல் 'எஸ். ஆர். எஸ்'

காரைநகரை பிறப்பிட மாகக்கொண்ட யாழ்ப்பாணம் பிரபல ஜவுளி வர்த்தகர் அம ரர் எஸ் ஆர். செல்லத்துரை [எஸ். ஆர். எஸ்.] 8- 8- 84 புதன்கிழமை தமது 3 வது வயதில் சிவபதமடைந்து விட் டார்கள் அமரர் எஸ். ஆர். எஸ். யாழ்ப்பாணத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டு புடைவை வியாபாரத்துறை யில் முன்னோடியாக திகழ்ந்து இன்று பல வர்த்தகர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வந்து ள்ளார்கள் அத்துடன் நெசவு கைத்தொழிலுக்கு ஊக்கம் அளித்து நெசவு நிலையத்தை ஆரம்பித்து பலருக்கும் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளார். இவ ரது பெருமுயற்சியினால் நெச வுத் தொழில் புதுப்பொலிவு பெற்று நெசவுத் தொழிலா ளர் பெருநன்மை அடைந்துள் ளார்கள்

சிறந்த சிவத்தொண்டரான இவர் காரைநகர் 'ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவிலில் பல்வேறு தொண்டுகள் புரிந் துள்ளார்கள். சிவன்கோவில் மாணிக்கவாசகர் அன்னதான மடாலயத்தின் தலைவராக 10 ஆண்டுகளுக்கு மேலாக சேவை புரிந்துள்ளார்கள். அத்துடன் திருப்பணிச்சபையின் உப-தலை வராக சேவை செய்ததன் பிர காரம் இன்றும் கோபுர திருப் பணி வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

ஈழத்துச் சிதம்பரத்தில் பிர தோஷ மூர்த்தியை ஸ்தாபித்து கடந்த 14 ஆண்டுகளாக பிர தோஷ பூசைக்கு ஒரு தனிச் சிறப்பு உதவுவதற்கு முன்னி ன்று உழைத்தார்.

செல்வத்தோடு சீலமும் கைக்கொண்டொழுகிய வர்த் தகவள்ளலும் சமூகத்தொண் டருமான எஸ் ஆர். எஸ். அவர் களின் மறைவு எங்கள் கிரா மத்துக்கும் சைவத்துக்கும் ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய 'ஈழத்துச் சிதம்பர சுந்தரேசப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

'சிவனடியான்'

வானலையில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல் தர்மபுரம் பி. சுவாமி நாதன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 கிளாரினட் ஏ. கே. சீ. நடராஜன்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்திய மஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 புராண போதம்
6-30 மெல்லிசை- எம் பாக்கியராஜா
6-45 சிறுவர் நிகழ்ச்சி சாம்போல்

இரவு
7-00 களத்துமேடு
7-15 முகத்தார் வீட்டில் பிரதி எஸ். யேசு ரட்னம்
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல் தாலாட்டு
7-45 குரல்வகை
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்- பக்திப் பாடல்கள்
9-30 பாட்டு எல். திலக நாயகம்போல்
10-00 பஜன்
11-00 ஒலிபரப்பு முடிவு

கட்டிட வேலை குறித்து புகார்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத்தொகுதி யில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் கடந்தஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதிமூலம் கட்ட ஆரம்பிக்கப் பட்ட பாடசாலைக் கட்டிடங் கள் சில இதுவரை கட்டிமுடிக் கப்படாத நிலையில் இருந்து வருவதாக புகார் தெரிவிக்கப் படுகின்றது.

இக்கட்டிட வேலைகளைப் பொறுப்பேற்ற தனிப்பட்ட ஒப்பந்தகாரர்கள் உரியகாலத் தில் வேலைகளை பூர்த்தி செய்து கொடுக்காதிருப்பதாக தெரி விக்கப்பட்டது.

மட்டக்களப்பு செய்திகள்

இரா. உதயகுமார்

ரூபா 2 லட்சம் தளபாடங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள பாடசாலைகளுக்கு தள பாடங்கள் கொள்வனவு செய் வதற்கான நடவடிக்கைகளை கல்வி இலாகா துரிதமாக மேற் கொண்டுவருகின்றது.

மட்டக்களப்பு தொகுதியி லுள்ள முஸ்லிம் பாடசாலை களுக்கு தளபாடம் வழங்க கிராம அபிவிருத்தி பிரதி அமைச்சர் டாக்டர் பரீத் மீராலெப்பை தனது தொகுதி நிதியில் 2 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்.

பட்டிருப்பு தொகுதி பாட சாலைகளுக்கு மாவட்ட அமைச் சினுல் வழங்கப்பட்ட 2 லட்சம் ரூபாய் தொகுதி நிதியிலிருந்து தளபாடங்கள் வழங்கப்பட வுள்ளது.

திடீர் சோதனை

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள சில வர்த்தக நிலையங் கள் மீது தற்போது வருமான வரி பரிசோதகர்கள் திடீர் சோதனைகளில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் கள்.

இப்பகுதியிலுள்ள வர்த்தகர் கள் வருமானவரி விதிப்பதில் தவறான தகவல்களை வருமான வரி திணைக்களத்திற்கு தெரி விப்பதாக திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உணவு போஷாக்கு வாரம்

திட்ட அமுலாக்கல் அமைச் சின் உணவு போஷாக்கு கொள் கைத்திட்டமிடல் பிரிவினரால் வரும் அக்டோபர் 29ம் திகதி தொடக்கம் நவம்பர் 2ம் திகதிவரை அகில இலங்கை ரீதியில் உணவுப் போஷாக்கு வாரம் மேற்கொள்ளப்படு கிறது.

புனரமைப்பு

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் சுமார் 12 வருட காலத்தில் பின்பு ஆதன மதிப் பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வரியிறுப்பாளர்கள் இடாப்பு புனரமைப்பு செய்வதில் சபை வரிமதிப்பீடு பிரிவு ஊழியர்கள் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள் ளார்கள்.

ஆறு வருடங்களுக்கொரு தடவை வரிமதிப்பீடு வேலை கள் மேற்கொள்ளப்படவேண் டும். ஆனால் 1972ம் ஆண்டின் பின்பு மேற்கொள்ளவில்லை.

670தொண்டர் ஆசிரியர்

மட்டக்களப்பு மாவட்டத் திலுள்ள நான்கு கல்விவட்டா ரப்பாடசாலைகளுக்குஇதுவரை 670 தொண்டர் ஆசிரியர்கள் இவ்வருடம் நியமனம் செய் யப்பட்டுள்ளார்கள்.

இத்தகவலை தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கு பொறுப்பான கல்வி அதிகாரி ஜனுப் எம் ஏ சம்சுதீன் தெரி வித்தார்.

உபகரணங்கள் வழங்கப்படும்

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள சகல கிராமோதயசபை களுக்கும், பிரதேசசபைகளுக் கும் முறையே 100, 200 ரூபா பெறுமதியான காகிதாதி உப கரணங்கள் மாவட்ட உள்ளூ ராட்சி திணைக்களத்தால் வரு டாந்தம் வழங்கப்படுமென்று மாவட்ட உள்ளூராட்சி ஆணை யாளர் திரு. இரா. தியாகலிங் கம் சகல உதவி அரசாங்க அதி பர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பாக்கு 25 சதம்

மட்டக்களப்பு பகுதியில் பாக்கு ஒன்றின் விலை 5 சதத் தில் இருந்து 25 சதமாக அதி கரித்துள்ளது.

இதனையடுத்து 25 சதம் விற் பனை செய்யப்பட்ட வெத் திலை பாக்கின் விலையும் 50 சத மாக உயர்த்தப்பட்டுள்ளது.

கோரிக்கை

வடக்கு கிழக்கிலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பத் தாரிகளுக்கு அடையாள அட் டைகள் தாமதமின்றி வழங் கப்படுவதற்குரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென பிரதேசஅபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை தேசிய பந்தோபஸ்து அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை விடுத் துள்ளதாக தெரிய வருகிறது.

மீண்டும் வழங்கப்பட்டது

கடந்த மார்ச் மாதம் இனந் தெரியாதநபர்களால்கொள்ளை யடிக்கப்பட்ட மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்தி விஞ்ஞயகர் வித்தியாலய ஆசிரியர்களின் சம்பளம் 17 ஆயிரம் ரூபாய் கல்வி இலாகாவினுல் மீண்டும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்புகல்விப் பணிப் பாளர் ஜனுப் ரி.டி. ஹஞன், கணக்காளர் திரு எஸ்.கெங்கா தரன் ஆகியோர் திறைசேரி யுடன் தொடர்புகொண்டதை யடுத்து இச் சம்பளம் வழங் கப்பட்டதாக வித்தியாலய அதிபர் திரு செ சாம்பசிவம் எமது நிருபரிடம் தெரிவித் தார்.

எருமை இறைச்சியுடன் கைது

(திருகோணமலை)

109 கிலோ எருமை மாட்டு இறைச்சியை மூன்று பார்சல் களாகக் கட்டி வைத்துக் கொண்டு கந்தளாய் பஸ் நிலை யத்தில் நின்ற ஒரு நபரை கந் தளாய்ப் பொலீசார் கைது செய்தனர்.

எருமை மாட்டிறைச்சி பரிசோதனைக்காக வைத்திய அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட் டது. சந்தேக நபர் நீதிவா னின் முன்னிலையில் ஆஜா ராக்கப்பட்டார். பின்னர் நீதவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக் கப்பட்டார்.

இடமாற்றம் ரத்து

(புலோலி)

பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். தங்கராசாவின் திரு கோணமலைக்கான இட மாற் றம் ரத்துச்செய்யப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. டாக்டர். தங்கராசா தொடர்ந்தும் பருத்தித்துறை கால் நடை வைத்திய அதி காரியாகக் கடமையாற்றி வருகின்றார்.

நுவரானி

மாலை
5-30 'மைட்டி மௌஸ்' (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'அவள் ஒரு ஜீவநதி உள்ளூர்த்திரைப்படம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 கண்டிய நடனம்
7-45 ஆழ்கடல் ஆராய்ச்சி
8- 5 செய்திகள் (சிங்களம்)
8-35 ஆழ்கடல் ஆராய்ச்சி தொடர்ச்சி
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' இறுதி நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பிக்வலி' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பிக்வலி தொடர்ச்சி
10-45 நிகழ்ச்சிகள் முடிவு

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
உயர்ந்தவர்கள்

சாந்தி [யாழ் நகர்]
10-30, 2-30, 4-45, 700
Michael Caine David Warner
THE ISLAND
action packed
adults only

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
பல்லாண்டு வாழ்க
(புத்தம் புதிய பிரதி-கலர்)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜ்ஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணும்மா
மனோகரா
(புதிய பிரதி)

நீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison..
Darmendra...
Zeenath Aman..
in
SHALIMAR
Action-Packed-
English Movie

வின்சர் (யாழ். நகர்)
இன்று மட்டும்
தினசரி 10-30. 2-00, 4-30
EAGLE'S WING
A BATTLE FOR SURVIVAL
உயிர் வாழ்வதற்கு உரிமைப் போராட்டம். திகிலூட்டும் வியக்கத்தக்க காட்சிகள் நிறைந்த சித்திரம்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
ஜெய்சங்கர்
ஸ்ரீதேவி
முடிசூடா மன்னன்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெமினி-சரோஜாதேவி
நாகேஷ்
தாமரை நெஞ்சம்
[புதிய பிரதி]

யாழ். நவீனசந்தை கொள்ளைவழக்கு:

குற்றத்தை ஒப்புக்கொண்ட மூவருக்கு அபராதமும் சிறையும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தை வர்த்தக நிலையக் கொள்ளை வழக்கில் எதிரிகள் மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 84 ஜூன் 7ம் தேதி யாழ். நவீன சந்தையிலுள்ள சி. லோகேஸ்வரனின் கடையில் 1, 11, 285 ரூபா பெறுமதியான பொருட்களைக் கடையை உடைத்து திருடி அப்பொருட்களை வைத்திருந்ததாக எஸ். கனகராசா, சோ. நெப்போதுரை, ஆ. சிவரத்தினம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

யாழ். பொலிஸ் சார்ஜன் எட்வாட் வழக்கை நடத்தினர். எதிரிகள் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். எதிரிகளுக்கு கடை உடைத்த குற்றச்சாட்டுக்கு ஒருவருட கடுழியமும் திருட்டு குற்றச் சாட்டுக்கு 6 மாத கடுழியமும் திருட்டுப் பொருட்களை வைத்திருந்த குற்றத்திற்கு 6 மாத கடுழியமும் விதிக்கப்பட்டு, இவை 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்படுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் எதிரிகளுக்கு 1ம் குற்றச் சாட்டிற்கு 1000 ரூபா அபராதமும் 2ம் குற்றச் சாட்டுக்கு 750 ரூபா அபராதமும் 3ம் குற்றச் சாட்டுக்கு 500ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (க)

சித்திபெறத் தவறியவர்க்கு மீண்டும் பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்ப சுகாதார ஊழியர் பயிற்சியில் சித்தி பெறத் தவறிய பயிற்சியாளர்களுக்கான இருமாதப் பயிற்சி வகுப்புக்கள் சம்பளமின்றி தற்போது மட்டக்களப்பு தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் மட்டு., யாழ் தாதிகள் பயிற்சி கல்லூரிகளைச் சேர்ந்த 12 பேர் பயிற்சிபெற்றுவருகிறார்கள்

இவர்களைத்தவிர இவ்வருடம் புதிய பயிற்சியாளர்கள் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இறுதியாக பயிற்சிமுடித்து வெளியேறியவர்கள் தற்போது யாழ். மாவட்டத்தில் வெளிக்களப் பயிற்சிபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இளம் பெண் தற்கொலை

[கிளிநொச்சி]

வேலைக்குச் செல்லக்கூடாதென தாய் கண்டித்ததால் கவலை அடைந்த இளம் பெண் நஞ்சருந்தி மரணமானார்.

வட்டக்கச்சி மம்மிக்குளம் கிராமத்தில் வசித்துவந்த கிருஷ்ணபிள்ளை அருந்ததி [21 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் என். இராசமேசகரம் ஆஜர்செய்தார். பிரேத பரிசோதனையை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா மேற்கொண்டார்.

அருந்ததி இணுவிலிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யவிரும்பி தாயிடம் அனுமதி கேட்டதாகவும், அதற்குத் தாய் மறுத்துவேலைக்குச்செல்ல விடாது தடுக்கவே கவலையடைந்திருந்த இவர் ஒருவருக்கும் தெரியாதவகையில் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என மரண விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்துதெரிய வந்தது.

மரணமானவரின் தாய் கி. மகேஸ்வரி சாட்சியமளித்ததைத்தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட

ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்பட்டது

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கல்வி மாவட்ட ஆசிரியர்களின் இம்மாத சம்பளப்பணம் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன், கல்விப்பணிப்பாளர் ஜனப் மன்சூர் ஆகியோர் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக உரிய வேளையில் வழங்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து வங்கிகள் மூலம் பணம் பெறமுடியாத நிலை உருவாகியதையடுத்து மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும்முகமாக கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர், கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி கொத்தணிச் செயலாளர் ஏ. கே. இராசேந்திரம் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதனைச் சந்தித்து இம்மாவட்ட ஆசிரியர்களின் சம்பளப்பணம் வழங்குவது தொடர்பாக ஆலோசனை ஒன்றை மேற்கொண்டனர்

இதன்பின் எடுக்கப்பட்ட முயற்சி காரணமாக கிளிநொச்சி கல்வி மாவட்ட ஆசிரியர்களுக்கு உரியதினத்தில் ஒழுங்கான முறையில் சம்பளப்பணம் வழங்கப்பட்டது.

பூநகரி, பளை, கிளிநொச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் அவ்வப்பகுதிகளில் வைத்தே சம்பளப் பணம் வழங்கப்பட்டது.

திருடமுயன்றுராம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோவில் வீதியில் திருடமுயற்சித்த ஒருவரை, இளைஞர்கள் பிடித்துவந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலிலுள்ள யாழ். மாநகர சபை காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் இத்திருட்டு முயற்சி நல்லூர் கோவில் தடைப்பகுதிக்கு வெளியே நடந்துள்ளதாகத் தெரிய வந்தது.

கோவில் பகுதிக்கு வெளியில் இச்சம்பவம் நடந்துள்ளதால் தாங்கள் பொறுப்பில்லை என்று யாழ், மாநகரசபை ஊழியர் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து இளைஞர்கள் அவரைக் கூட்டிச் சென்றார்கள். (க)

வருடாந்தக் கூட்டம்

(அரியாலை)

யாழ். வை. எம். சீ. ஏ. யின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி மாலை வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலவச தொழிற்பயிற்சி

(கிளிநொச்சி)

கரைச்சி லயன்ஸ் கழகத்தினர் இப்பகுதியில் வாழுகின்ற வறியகுடும்ப இளைஞர்களின் எதிர்கால நல்வாழ்வைக் கருதி பலதுறைகளில் தொழிற் பயிற்சியை அளிக்க முன்வந்துள்ளனர்.

கரைச்சி லயன்ஸ் கழக ஆதரவில் தலைவர் எம். யோசப் நாயகத்தின் வேண்டுகோளின் பேரில் பரந்தன் வை எம். சி. ஏ. இயக்குனர் திரு. த. கிருபா ஐந்து இளைஞர்களுக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றவடபிராந்திய இயக்குனர் லயன் ஏ. நாகேந்திரன் மூன்று இளைஞர்களுக்கும் தத்தம் பயிற்சி நிலையங்களில் தொழிற்பயிற்சியை அளிக்க முன்வந்துள்ளனர்.

இப்பயிற்சிக் காலத்தில் உணவு, இருப்பிடவசதிகளுடன் ஒருவருட கால விவசாயப் பயிற்சியும் ஆறுமாதகால தச்சுத்தொழில் பயிற்சியும் ஆறுமாத கால கட்டிட வேலைப் பயிற்சியும் அளிக்க கரைச்சி லயன்கழகம் ஒழுங்கு செய்துள்ளது. இந்த இலவச பயிற்சியைப்பெற விரும்பும் இளைஞர்கள் கரைச்சி லயன்ஸ் கழகத்தலைவர் திரு. யோசப் நாயகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அவர் சேவை அழியாது

இரவு பகலெனத் தன் வாழ்வை மக்கள் சேவைக்கே அர்ப்பணித்த இளைஞர் ரஞ்சனின் சேவை அவர் மறைவின் பின்னும் என்றும் அழியாமல் நிலைக்கும் என்று நம்பலாம்.

சோர்வும், சோம்பலுமின்றி எந்த நேரமும் பொதுப் பணியே தன் கடனைக் கருதி, சமூகத்துக்கு அவர் ஆற்றிய சேவையை இலேசாக மறந்து விட முடியாது. இளம் வயதிலேயே மக்கள் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்து இளம் வயதிலேயே மறைந்துவிட்ட தொண்டமனற்றைச் சேர்ந்த ரஞ்சன் ஆயிரத்தில் ஒருவன்.

ம. அலீஸ்

ஆலோசனைக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கம் மாதர் கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றை புனரமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. சிவகுமார் தலைமையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

சுமார் 50 சங்கங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன. உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா, கிராமசேவையாளர் எஸ். தனபாலசிங்கம் ஆகியோரும் பிரஸ்தாப சங்கங்கள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து உரையாற்றினர்கள்.

வியாபாரி மூலை சித்தி விநாயகர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வியாபாரிமூலை சித்திவிநாயகர் ஆலய உற்சவம் அடுத்த மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும் பத்தாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்

கடையிற் சுவாமி கோவில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நீராவியடி கடையிற் சுவாமிகோவில் ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன கும்பாபிஷேகக் கிரிகைகள் 27ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

நாளை புதன்கிழமை அதிகாலை தூபி அபிஷேகமும் மாகும்பாபிஷேகமும் நிகழும். பிரதிஷ்டாசிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதம சிவாசாரியாராக இருக்க ஒன்பதுகுருமார்கும்பாபிஷேகக்கிரிகைகளைச் செய்கின்றனர்

மூலலிங்கத்துக்கும் அம்பாள் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், ராகு, சந்தானகோபாலர், சண்டேசுரர் ஆகிய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது.

(ப)

புதிய நிர்வாகிகள்

(கிளிநொச்சி)

பளை கோவில்வயல் மாதர் கிராம முன்னேற்றச் சங்க புனரமைப்புக் கூட்டம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்.

தலைவர் திருமதி. சிவகுமார் உப தலைவர்கள்:- க. நாகேஸ்வரி, க. பாலபரமேஸ்வரி, செயலாளர்:- ஆ. ராஜேஸ்வரி. உப செயலாளர்:- வே. செல்வலட்சுமி, பொருளாளர்:-பொ. கனகாம்பிகை, செயற்குழு உறுப்பினர்களாக:- ப. சரஸ்வதி, வே. பாலபத்மினி, க. பாலநாகேஸ்வரி, க. வசந்தகுமாரி, செ. சாந்தகுமாரி, நா. இராசமலர், வி. குணமணியும் கணக்குப்பரிசோதகராக:- க. ஜெகதீஸ்வரியும், தெரிவுசெய்யப்பட்டனர்.

மீண்டும் தலைவரானார்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் மணிவாசகர் சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அதன் தலைவராக காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபரான திரு. செ. தேவதாசன் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியஅறிக்கை நாளை சமர்ப்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கக் கட்டிடத்தின் எரிந்த இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத் துண்டுகள் தொடர்பான விசாரணை, யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நாளை புதன்கிழமை நடைபெறும்.

சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை நாளை சமர்ப்பிக்கப்படும். நேற்று நடைபெற விருந்த இவ்விசாரணை சட்ட வைத்திய அதிகாரி வராததினால் நாளை வரை பின்போடப்பட்டது. [க]

ஓய்வூதியம் விரைவில் வழங்க மக்கள் வங்கி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக் கிளைகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் வங்கிப் பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

இது விஷயமாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டதாகவும், அடுத்த வாரத்திற்குள் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாகவும் அவர் கூறினர்.

யாழ். நவீன சந்தை, மக்கள் வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறும் 50 பேர் கொண்ட குழுவினர் திரு. வ. சி. குருசாமி தலைமையில், நேற்று வங்கி பிரதேச முகாமையாளரைச் சந்தித்தனர்.

அப்பொழுது பிரதேச முகாமையாளர், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் தெரிவித்தார்.

ஓய்வூதியம் கொடுக்கும் இடம், தேதிபற்றி பின்னர் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [க]

சுன்னகத்தில் பரபரப்பு

(ஊரெழு)

அண்மைகாலத்தில்ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பதட்ட நிலையிலிருந்த சுன்னகம் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது இன்று கரணவாயில் ஏற்பட்ட அசம்பாவிதமொன்று சம்பந்தமான செய்தியைக் கேள்வியுற்றதும் சுன்னகத்தில் நின்றிருந்த பொதுமக்கள் உடனடியாகவே அவ்விடத்தைவிட்டுச் செல்லத் தொடங்கினர்.

அங்குள்ள பெரும்பாலான விற்பனைநிலையங்கள் மூடப்பட்டன சந்தை அலுவல்களும் நிறுத்தப்பட்டன அன்று சந்தை நாளானதால் மரக்கறி விற்பனையாளர்கள் உட்பட ஏராளமான பொதுமக்களும் அங்கு வந்திருந்தனர். அன்று நண்பகலுடன்பொதுமக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. ஒருசில விற்பனைநிலையங்கள் மட்டும் ஒற்றைக் கதவில் திறந்திருக்கக் காணப்பட்டன.

நேற்று திங்கட்கிழமை சுன்னகம் சந்தை அலுவல்கள் வழமைபோல் நடைபெற்றதுடன், சகல விற்பனைநிலையங்களும் திறக்கப்பட்டிருந்தன பொதுமக்களும் பெருமளவில் காணப்பட்டனர்.

ஜப்பானில் இலங்கை சாரணர்கள் மூவருக்கு சாதனை பதக்கம்!

[கொழும்புத்துறை]

ஜப்பானில் நடைபெற்ற சிரேஷ்ட சாரணர் பாசறையில் கலந்து கொண்ட இலங்கைச் சாரணர் குழுவைச் சேர்ந்த மூவருக்கும் சாதனைக்கான வெண்சூன் பதக்கம் கிடைத்துள்ளது.

இருபது நாடுகளின் சாரணர் குழுக்கள் பங்குபற்றிய இப் பாசறையில் இலங்கைக்கு மட்டுமே இப்பதக்கம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் 23-ம் திகதி ஜப்பானில் நிப்பொன் என்னுமிடத்தில் ஆரம்பமாகிய இச்சிரேஷ்ட சாரணர் பாசறை இம்மாதம் 10-ம் திகதி முடிவடைந்தது.

கிளிநொச்சிக் கல்வி வட்டாரத்திலுள்ள வட்டக்கச்சி மகாவித்தியாலயக் குழுச் சாரணர் தலைவர் திரு. மா. புவனேந்திரன் தலைமையில் ஜப்பான் சென்ற இலங்கைச் சாரணர் குழுவில் மொரட்டுவையைச் சேர்ந்த திரு. சஞ்சீவ பெர்ணாண்டோ, கொறணையைச் சேர்ந்த திரு. ஜெகாத் விஜய சிறி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இலங்கைச் சாரணர் குழுவைச் சேர்ந்த திரு. ஜெகாத் விஜயசிறியின் 'தேசிசிய' நடனம் இப் பாசறையில் முதல் முறையாக மேடையேற்றப்பட்டது என்றும், ஜப்பான் ரசிகர்களின் வேண்டுகோளுக் கிணங்க இரண்டாம்முறையும் மேடை ஏறியதுடன், இறுதி நாள் மூன்றும் முறையாக மேடையேற்றப்பட்டது என்றும், இலங்கைக் குழுவின் நடனம் மூன்றுமுறை மேடையேறியதுபோல் இப் பாசறையில் கலந்துகொண்ட வேறு எந்த நாட்டுச் சாரணர் குழுவின் நடனமும் மூன்றுவது தடவையாக மேடையேறவில்லையென்றும் இலங்கை சாரணர் குழுத் தலைவர் திரு. மா புவனேந்திரன் தெரிவித்தார்.

இலங்கைக் குழுவைச்சேர்ந்த மூவரும் தியானமுறையிலான சமயநிகழ்ச்சியில் பங்குபற்றி அனைவரதும் பாராட்டுதல்களையும் பெற்றதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.

சமாதான சபை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சபைத்தலைவர் திரு. க. நாகலிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையை உருவாக்க வசாவிளான் கிராமசேவையாளர் திரு. யோ. அருளானந்தம் முழுமூயற்சி எடுத்துவந்தார்.

திரு. எஸ். சிவஞானத்தை தலைவராகவும், திரு எஸ். சபாநாயகத்தை செயலாளராகவும் கொண்ட இச் சபையில் 10 அங்கத்தவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

மேற்படிசபை ஆரம்பித்த சொற்பகாலத்தில் 30 க்குமேற்பட்ட காணித்தகராறுகளைத் தீர்த்துவைத்துள்ளது.

ஏழைகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகும்,,

இவ்வாறு அரியாலை தெங்கு பனஉற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு த. சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கே, கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தினர். இருவரின் மனைவிமாரும் சடலங்களை அடையாளம்காட்டினர். 31-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இப்படியும் நடக்கிறது

குருநகர் வங்கியில், அரசு ஊழியருக்கு வேதனம் வழங்கப்பட்டு வருகிறது. இது இப்பொழுது சின்ன விஷயம்.

'நான் முந்தி நீ முந்தி' என்று முத்தவர்கள் ஓடித்திரியும் காட்சி..... பாவம் இப்படியும் நமக்கு ஒரு கொடுமையா என்று தலையில் சம்மட்டியால் அடிக்கலாம் போல் தோன்றியது.

இத்தனைக்கும் மத்தியில் 'சிறப்புச் செய்தி'யும் இடம் வருகிறது.

நல்லூர்வாசி திரு. க. வாமதேவா. இவர், குருநகர் வங்கிக்குச் சென்று வேதனம் பெற்று நம்பிக்கையுடன் வீடு திரும்பினார்.

'மடியில் கட்டிவைத்த' பணத்தை வீடுசென்று கணக்கிட்டபோது நூறு ரூபா கூடுதலாக இருந்தது! திகைத்துப்போனார் அவர்!

என்ன செய்வார் அவர்? கண்ணை மூடிக்கொண்டு மனைவியிடம் கொடுக்காமல், நேரே குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று, அங்குள்ள மேலதிகாரியிடம் தமக்குக் கிடைத்த மேலதிக நூறு ரூபா பற்றித் தெரிவித்து அந்தச் சுளையான காசை திருப்பிக் கொடுத்தார்.

யாழ்ப்பாணம் இப்பொழுது உயர்ந்துகொண்டே சென்று கொண்டிருக்கிறது!

'ஊடுருவி

அரியாலை கலைஞர்களுக்கு பாராட்டு

[மானிப்பாய்]

யாழ். அரியாலையின் கலை வளர்ச்சிக்கு தொடர்ந்து பல வருடங்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆறு மூத்த தலைசிறந்த கலைஞர்களுக்கு அரியாலைக் கலாமன்றத்தினர் விரைவில் பாராட்டுவிழா ஒன்றினை நடத்தவிருக்கின்றார்கள்.

திரு. கா. கந்தையா மரபு வழி நாடகத்திற்காகவும் திரு. எஸ். சதாசிவம் சமூக வரலாற்று நாடகத்துக்காகவும் திரு. வ. கந்தையா ஓவியத்துக்காகவும் திரு. ஐ. எஸ். சண்முகநாதன் நாடகத்துக்காகவும் திரு. எஸ் பாலசிங்கம் இசைக்கலைக்காகவும் திரு. இ. க. குமரையா நாடகத்துக்காகவும் பாராட்டப்பட விருக்கின்றார்கள்.

இந்த விழாவை சிறந்த முறையில் கொண்டாடுவதற்காக அரியாலை கலாமன்றத் தலைவர் திரு. வி. கே. சண்முகராசா உபதலைவர் கலாநிதி சு. மோகனதாஸ் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் ஆகியோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பாராட்டுவிழாவின் போது கலைஞர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்கள் தமிழ்க் கலைத்துறைக்கு ஆற்றிய பணி பற்றிய நூல் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

இம் மலர் வெளியீட்டுக் குழுவில் திரு. வே. ஜயாத்துரை, திரு. எஸ். உருத்திரேஸ்வரன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

தமிழர் கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலை கூட்டணி மேற்படி மாநாட்டில் பெரும்பாலும் கலந்து கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

'ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கும் இரண்டாவது சபை பற்றிய திட்டத்தை பௌத்த சமயத் தலைவர்கள் எல்லோரும் எதிர்த்து வருகின்றார்கள். ஆனாலும் நாளை கூடும் மாநாடு முன்னர் தெரிவித்ததுபோன்று இரு குழுக்களின் அறிக்கையைவிட தமிழர் பிரச்னைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திரு, அ அமிர்தலிங்கம் விடுத்துள்ள இன்னொரு அறிக்கையில் தமிழர் பிரச்னைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண முயற்சி செய்யும் இலங்கை, வேறுவகையில் இப்பிரச்னைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முயற்சி செய்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், தென் ஆபிரிக்கா, தென் கொரியா, சீனா போன்ற நாடுகளிடமிருந்து அதி நவீன ஆயுதங்களைப் பெற்று இஸ்ரேலிய, பிரிட்டிஷ் உளவுப்படைகள் மூலம் பயிற்சி பெற்றுவரும் இலங்கை இராணுவத்தினர் தமிழர்களை அழித்துவிடுவார்கள் என்று தமிழ் மக்கள் அஞ்சுகின்றார்கள் கடந்த 4 மாதங்களில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் 200 அப்பாவித் தமிழர்களைக் கொன்றதோடு 5 கோடி ரூபா பெறுமதியான பொருட்களைத் தீயிட்டுக் கொழுத்தியுள்ளார்கள்'' என்றும் தெரிவித்துள்ளார்

கிரிக்கெட் டெஸ்ட்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விநோதன் ஜான் சிறப்பாக பந்து வீசி நாலு விக்கெட்டுகளை எடுத்தார்.

இலங்கை தமதுமுதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 491 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலங்களில் ஒத்துழைப்பு நல்கிய இளைஞர் மன்றங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், கல்லூரி சாரணர்கள், சென்ஜேன் அம்புலன்ஸ படைப்பிரிவினர் மாநாகர சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரது உற்சவ காலச் சேவையை பாராட்டியாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் இன்று பிற்பகல் 4-30 மணிக்கு நல்லூரில் உள்ள 'இந்து' விடுதியில் தேநீர் விருந்தளித்து கௌரவிப்பார்.

இவ்வைபவம் யாழ், குளோபல் ஆதரவில் நடைபெறுகிறது.

மரண அறிவித்தல்

திருமதி மலர் அல்போன்சஸ்

திருமதி மலர் அல்போன்சஸ் மலேசியாவில் காலமாகிவிட்டார். இவர் திரு. A. F. அல்போன்சஸ் அவர்களின் அன்பு மனைவியும் வன்மலா (நைஜீரியா), டாக்டர் ராஜகுமார் (கனடா), விஜயகுமார் (என்ஜினியர் மலேசியா), ஷாமலா (அபுடாபி), சூரியகுமார் (லண்டன்), அமலகுமார் (பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாகந்தன் (நைஜீரியா), டாக்டர் ஷாலினி (கனடா), மனோமா (மலேசியா), பெனடிக்ற் (அபுடாபி) ஆகியோரின் அன்புமாமியாரும் திரு வில்பிறெட் யோசேப்பின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் பற்றி பின் அறிவிக்கப்படும்.

55, 4ம் குறுக்குத் தெரு,
(1471) யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

திருமதி அப்பையா செல்லம்மா

[யாழ்ப்பாணம்]

திருமதி அப்பையா செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரபல யாழ்ப்பாணம் வர்த்தகர் வைத்திலிங்கம் அப்பையாவின் அருமை மனைவியாரும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் பேரம்பலம் [பேரம்பலம் அன் சன்ஸ் [M. M. T. P] அவர்களின் அருமைத் தாயாரும் திருமதி இராஜலட்சுமியின் அருமை மாமியாரும் திவ்யராஜ்சனி பாலச்சந்திரன் (U. K), ஜெகதீஸ்வரா [U. K],, ஞானபாஸ்கரா (U. S A), மகேந்திரா [FRANCE], ராஜமனோகரா [உரிமையாளர் [அ. பேரம்பலம் அன் சன்ஸ்] சிவகுமாரி [CANADA], சந்திரவதனி [U. K], ஜெகஜெனனி [CANADA] ஆகியோரின் அருமைப் பேத்தியும் மைதிலி, தாரா, ஜெனுர்த்தன், பிரியா. ரம்யா ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார், அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 28-8-84 இன்று மாலை 4-00 மணியளவில் 'ராஜாலயா', 19 கடைச்சாமி வீதி இலிந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

1474

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.